பக்கங்கள்-16 | மாசி 10,2013 | விலை-30.00

விளம்பரங்கள்
அனைத்துவகையான விளம்பரங்களையும் பிரசுரிக்க நாடுங்கள்...
தினப்புயல்
154, 6ம் ஒழுங்கை,
தேக்கவத்தை,
வவுனியா.

நடுநிலை இதழ்
# தினப்புயல்
THINAPPUYAL
තිනප්පුයල්
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06

அன்பான வாசக நெஞ்சங்களே
எமது தினப்புயல் பத்திரிகை தொடர்பான அனைத்து விமர்சனங்களையும், ஆக்கங்களையும், வரவேற்கின்றோம்.

மலர்-01 Tel&Fax:(+94)247451360-1, Hot line:0711850885 Email:tthinappuyalnews@yahoo.com இதழ் -26

## பிரபாகரன் கழுத்தில் தொங்கிய சையனற் வில்லைகள் என்னவாயின...



## இலங்கைத்தீவு இந்தியா, சீனா போன்ற நாடுகளின் தரிப்பிடமே...



## சட்டவாக்கத்தினூடாக காய்களை நகர்த்தும் -ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ...

NEW DESIGN MOBILE CENTER

- கையடக்கத் தொலைபேசி முகவர்
- போன் மென்பொருள் (Soft ware)
- போன் திருத்துனர்
- போன் லொக் உடைத்தல்


A.M.M .Jasly
Proprietor
0716108061, 0785145258

#204, பசார் வீதி, வவுனியா
#204, Bazaar Street, vavuniya.

NOKIA SAMSUNG Sony Ericsson MOTOROLA LG vodafone Dialog Airtel Express Yourself Sri Lanka Telecom Mobitel HUTCH etisalat

-இது தமிழ் பேசும் மக்களின் இதயத்துடிப்பு-

# பிரபாகரனின் கழுத்தில் தொங்கிய சையனற் வில்லைகள் என்னவாயின?



புலிகளின் தலைவர்கள், படையினரிடம் சரண் அடைந்த பின்னர், எவ்வாறு கொல்லப்பட்டார்கள் என்பது குறித்து, பல்வேறு கோணங்களிலும் செய்திகள் வெளிவந்தன.இறுதி நேரத்தில், பிரபாகரனையும் ஏனைய புலித் தலைவர்களையும், காப்பாற்றுவதற்காக அரச தரப்பினருடன், தமிழ்த்தரப்புத் தலைவர்கள் திரை மறைவில் கலந்துரையாடினர் என்றும், படையினரிடம், சரண் அடைந்த பின்னர், புலித் தலைவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டார்கள் எனவும், ஊடகச் செய்திகள் தெரிவிக்கின்றன..

இது தொடர்பாக, கஜேந்திரனின் உறவினர் எனக் கூறிக்கொள்ளும் குமரன் என்பவர், எனக்கு இலத்திரனியல் கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார். தான் கஜேந்திரனிடம் இது குறித்து கேட்டதாகவும், அவர்கள் அவ்வேளை படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டார்கள் என்றும், புலிகளின் தலைவர் பிரபாகரன் சரண் அடையவில்லை என, கஜேந்திரன் தனக்குக் கூறியதாகவும் எழுதியிருந்தார். அத்துடன் புலிகளின் தலைவர், ஒரு போதும் சரண் அடையமாட்டார், அப்படி ஒரு நிலைமை ஏற்பட்டால்! அவர் தன்னை தானே கொன்றிருப்பார், என்றும் எழுதியிருந்தார்.

இப்படியாக தலைவர் செய்து கொள்ளுவார் என, புலிகள் இயக்கத்தின் சகல மட்டத்திலும் அனைவரும் நம்பியிருந்தார்கள். ஆதரவாளர்களும் அப்படியாகவே, அவர் செய்வார் என நினைத்து இருந்தனர், ஆனால் இறுதி நேரத்தில், அவர் கழுத்தில் சையனற் குப்பிகள் காணப்படவில்லை, இருந்தாலும் அவர் கடிக்கும் நிலையிலும் இருக்கவில்லை.

பிரபாகரனும் அவரின் சகாக்களும், புதுமாத்தளன் பகுதிக்குள் பதுங்கியிருந்த வேளை, தமிழகத்தில் மக்களவை தேர்தலுக்கான பிரசாரங்கள் சூடு பிடித்து இருந்தன. இலங்கைத் தமிழர்களின் அவல நிலமையினை, அனைத்துக் கட்சிகளும் தமது பிரச்சாரங்களுக்கு பாவித்து இருந்தன. அப்போது மிகவும் வல்லமை பொருந்திய நாடு ஒன்றின் உதவியுடன், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் கொடியுடன், வெளிநாடு ஒன்றிற்கு புலிகளின் தலைவரை அனுப்பி வைப்பதற்கான ஏற்பாடுகளை காங்கிரஸ் கட்சியின் அமைச்சர் ஒருவர், மேற்கொண்டு வருவதாக பத்திரிகை ஒன்றில் செய்தி வெளியாக்கி இருந்தது.

மும்பாய் தாக்குதலுக்குப் பின்னர் புதிய அமைச்சுப் பொறுப்பினை ஏற்று இருந்த இந்த அமைச்சர், ஐரோப்பிய சமாதான தூதுவருடனும், அமெரிக்காவுடனும் இது குறித்துப் பேசியதாகவும், பத்திரிகையில் செய்தி வந்து இருந்தது. இந்த அமைச்சர் இவ்வகையான ஒரு ஏற்பாட்டினை மேற்கொண்டுவிட்டால்! அதன் மூலம் கிடைக்கும் பலன், காங்கிரஸ் கட்சியின் வெற்றிக்கு உதவிவிடும், என்று நினைத்த தமிழக காங்கிரஸ் தலைவர்கள் மூவர், தாமே பிரபாகரனை காப்பற்றுவதற்கான ஒரு திட்டத்தினை வகுத்த தோடு, காங்கிரஸ் அமைச்சரை நம்ப வேண்டாம் என, பிரபாகரனுக்கு தகவல் அனுப்பியிருந்தார்கள். அத்துடன் இந்திய தேர்தல் முடிவுகள் வரும் வரையில், அவசரப்படவேண்டாம் என்றும் அறிவுரைகள் வழங்கியிருந்தார்கள்.

அம்மா 40 இடங்களை கைப்பற்றுவார், அதன் பின்னர் மத்தியில், ஆட்சிக்கு வரும் கட்சியினை அம்மா ஆட்டி படைக்கலாம் என்றும், அம்மாவின் மூலம் மத்தியில் ஆட்சிக்கு வரும் கட்சிக்கு, அழுத்தம் கொடுத்து பிரபாகரனைக் காப்பாற்றலாம் என்றும், அந்த மூன்று தலைவவர்களும், புலிகளின் வெளிநாட்டுத் தலைவர்களுக்கு நம்பிக்கை கொடுத்து இருந்தார்கள். அதேவேளை இந்த முறை மன்மோகன் சிங் வீட்டுக்குதான் போவார் எனவும், ஜெயலலிதாவும், வைகோவும் தமிழ் ஈழம் பெற்றுத் தருவார்கள் எனவும், புலம் பெயர்ந்து வாழும் புலிகள், தமக்குள் பேசிக்கொண்டனர். புலி ஆதரவாளர்களின் ஆய்வுகளும், சிந்தனைகளும், பல வேளைகளில் விசித்திரமாகவே இருக்கும்.

புலிகளின் தலைவரைக் காப்பாற்றுவதன் மூலம், கிடைக்கும் பெருமை,புகழ், வாக்குகள் ஆகியனவற்றைக் கொண்டு, காங்கிரங் கட்சி வென்று விடக்கூடாது என்பதில், கோமாளி வையாபுரி, பிரபல மன்னர் ஒருவரின் பெயருடைய இடதுசாரி கட்சியின் தலைவர் ஒருவர், படகு புகழ் உயர் மாறன் ஆகிய மூன்று தலைவர்களும், குறியாக இருந்தனர்.

மேலும் புலிகள் குறித்தும், ஈழத் தமிழர்கள் குறித்தும், தமிழகத்தில் பேசும் உரிமையை, கொந்தராத்து எடுத்துக் கொண்டவர்கள். இந்திய



தேர்தல் முடிவடைந்ததும், அம்மாவின் ஆதரவினைக் கொண்டு, புலித் தலைவரைக் காப்பாற்றுவது என்று, மூன்று தலைவர்களும் திட்டமிட்ட அதேவேளை, இதற்கு ஆதரவாகப் புலிகளின் ஆதரவு இணையதளமான, தமிழ் நெற் இணைய தளத்தின் நிருபர்களில் ஒருவர், நோர்வே நாட்டில் இருந்து, தானும் இதற்கு உதவுவதாகவும், சமாதானத் தூதுவரும் உதவுவார் எனவும் கூறியிருந்தார்.

இதனை மலைபோல் நம்பிய புலிகளின் தலைவர், இந்திய தேர்தல் முடிவு வரும் வரையில், சமாளிப்பது என முடிவு செய்தார். இவ் வேளைகளின் புலிகளின் தலைவர், ஜ.நா, மற்றும் மனித உரிமைகள் அமைப்புடனும் பேசியவாறு இருந்தார். புலிகளின் தலைமை தம்முடன் பேசினார்கள் என ஜ.நா. பேச்சாளர் கூறியிருந்தமை இங்கு குறிப்பிட தக்கதாகும்.

அத்துடன் தமிழ்த் தலைமைகள் தான் ஜனாதிபதியின் சகோதரருடன் திரை மறைவில் பேச்சுக்களை மேற்கொண்டு, புலிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கி, இரகசியமாக வெளிநாடு ஒன்றிற்கு: தப்பிச் செல்ல அனுமதிப்பது குறித்து, பேசியவாறு



இருந்தார்கள். இந்திய தேர்தலில் காங்கிரஸ் தோல்வியினைத் தழுவும், மத்தியில் ஆட்சிக்கு வரும் கட்சிக்கு, அம்மாவின் 40 தொகுதிகள் உதவும் என, தமிழக தலைவர்களும் புலித் தலைவர்களும் நம்பியிருந்தனர். ஆனால் 16 ஆம் திகதி, இந்தியத் தேர்தல் முடிவுகள் வெளிவந்ததும், புலித் தலைவர்களும், தமிழக தலைவர்கள் மூவரும் பேய் அறைந்தவர்களாகிப் போயினர்.

இறுதியில் தமிழ்த் தலைமைகள் மஹிந்த சகோதரரை நம்ப வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாகினர். புலிகளின் தலைவர்களை சரண் அடையுமாறும், அரசு அவர்களை இரகசியமாக, தப்பிச் செல்ல அனுமதிப்பார்கள் எனவும், தமிழ்த் தலைமைகள் புலிகளின் தலைவர்களைக் கேட்டு கொண்டு இருந்தனர். அரசு விரித்த வலைக்குள் புலிகளின் தலைமை அகப்பட்டு கொண்டது.

புது குடியிருப்பிற்குள் படையினர் புகுந்ததும், விடுதலைப் புலிகளின் புதிய சர்வதேசப் பொறுப்பாளர் பத்மநாதன், நோர்வே சாமாதான தூதுவர் ஆகியோர், பிரபாகரனை வன்னியை விட்டு வெளியேற்றுவதற்கான பேச்சுக்களை, அரச தரப்புடன் திரை மறைவில் பேசியிருந்தார்கள். இதற்கு ஜனாதிபதியின் சகோதரர் ஆரம்பத்தில் மறுப்பு தெரிவித்து இருந்தார். பின்னர் சாதகமான பதில்களை கூறியிருந்தார்.

ஆனால் இந்த பேச்சுக்களை புலிகள் தரப்பு, பின்னர் முறித்துக் கொண்டது. இதற்கு காரணம் யாழ் முன்னாள் மேயரின் புதல்வரும், ஏனைய வெளிநாட்டு புலிகளின் தலைவர்களுமே ஆகும். நாங்கள் வெளிநாடுகளுக்கு அழுத்தம் கொடுத்து, எப்படியாவது யுத்த நிறுத்தத்தினைக் கொண்டு வர முயற்சிக்கின்றோம். நீங்கள் அவசரப்பட்டு நாட்டை விட்டு வெளியேற வேண்டாம் என, பிரபாகரனுக்கு புலிகளின் வெளிநாட்டு தலைவர்கள், உத்தரவாதத்தினை கொடுத்து இருந்தார்கள்.

எங்கிருந்தும் விடுதலைப் போராட்டத்தினைத் தொடர முடியும். நீங்கள் முதலில் நாட்டை விட்டு வெளியேறி வாருங்கள் என, இவர்கள் பிரபாகரனுக்கு அறிவுரை வழங்கியிருந்தால்! அவர் இன்று உயிருடன் இருந்திருக்க வாய்ப்புள்ளது.

அடுத்து காங்கிரஸ் கட்சியின் தமிழக அமைச்சர், நோர்வே சமாதான தூது வருடனும், அமெரிக்காவுடனும் பேச்சுக்களை மேற்கொண்டு, பிரபாகரனை இலங்கையை விட்டு தப்பிக்க மேற்கொண்ட முயற்சியினை, வை.கோ,தா.பாண்டியன், நெடுமாறன் மற்றும் நோர்வே நாட்டில் வசிக்கும், தமிழ் நெற் இணைய தள நிருபர்களில் ஒருவர், ஆகியோர் குழப்பாது விட்டு இருந்தால்! சில வேளைகளில், பிரபாகரன் காற்பாற்றப்பட்டு இருப்பார். இந்தத் தமிழகத் தலைவர்கள் தமது தேர்தல் நலன்களுக்காக, இந்திய தேர்தல் முடிவு வரை காத்தருக்குமாறு கூறி, புலிகளின் தலைவரை சாவின் விழிம்பு வரை அழைத்துச் சென்று இருந்தார்கள்.

தமிழ்த் தலைமைகள், ஜனாதிபதியின் சகோதரருடன் இரகசியப் பேச்சுக்களை மேற்கொண்டு புலிகளின் தலைவரை படையினரிடம் சரண் அடைய செய்து, புலிகளின் தலைமையையும் சாவின் கடைசிக்கே அழைத்து சென்று இருந்தனர். செல்வா பண்டா ஒப்பந்தம், டட்லி செல்வா ஒப்பந்தம் எனப் பலரின் கண்முன்னாலே கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தங்களையே, இல்லாது செய்த பெரும்பான்மை அரசுகள், திரை மறைவில் பேசும் பேச்சுக்களுக்கு, மதிப்பளிப்பார்களா என்று எமது தலைமைகள் சிந்திக்க வேண்டும். அல்லாது விடில், அனைத்து சர்வதேச ஊடகங்கள், மனித உரிமைகள் அமைப்புக்கள், எல்லாவற்றிற்கும் அறிவித்து விட்டு, புலிகளின் தலமை, படையினரிடம் சரண் அடைந்திருக்க வேண்டும். இதனைச் செய்திருந்தால், சரண் அடைந்தவர்களை படையினர் சுட்டுக் கொன்றிருக்க முடியாது.

புலிகளின் தலைமையின் வரட்டு கௌரவம், அவர்கள் கொல்லப்படுவதற்கு காரணமாகி இருந்தது. தாங்கள் சரண் அடைவதாக அனைவருக்கும் அறிவித்து விட்டு, படையினரிடம் சரண் அடைந்தால், தமிழ் மக்கள் மத்தியில் தங்களுக்கு இழிவு ஏற்பட்டுவிடும், தங்களை ''வெல்ல முடியாதவர்களாக'' மக்கள் மத்தியில் இனங்காட்டி விடும் என்பதற்காக, திரைமறைவில் காய்களை நகர்த்தியுள்ளார்கள். சூரிய தேவனின் புதல்வன் கர்ணன், அர்ச்சுனனின் அம்பினால் கொல்லப்படுவதற்கு முன்பாக இந்திரன், குந்தி தேவி எனப் பலரிடம் வரம் கேட்டு, கர்ணனை சாவின் விளிம்பிற்கு அழைத்துச் சென்று இருந்தார்கள்.

அதே போன்று புலிகளின் வெளிநாட்டுத் தலைவர்கள், தமிழகத் தலைவர்கள் சிலர் மற்றும் தமிழ்த் தலைமைகள் மேற் கொண்ட திரை மறைவிலான நடவடிக்கைகள், விடுதலைப் புலிகளின் தலைமை உட்பட, ஏனையோரையும் சாவின் விளிம்புக்கே இட்டுச் சென்றுள்ளது. நடந்து முடிந்த கறைபடிந்த இப்பாரிய வரலாற்றிலிருந்தாவது, தமிழ்த் தலைமைகள் ஐயம் தீர அரசியற்பாடங்களைக் கற்றுக்கொண்டு, அடுத்த கட்டக் காய்நகர்த்தல்களை சரியாகவே மேற்கொள்வார்களேயானால், அது அவர்களை நம்பியிருக்கும் ஈழத்தமிழர்களுக்கு அவர்கள் செய்யும் கைமாறாகும்.

– இரணியன் –

தினப்புயல்
ஆசிரியர்பீடம்
இல:154, 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை, வவுனியா.

### பாலியல் பலாத்காரங்களைக் குறைப்பது தொடர்பில் அரசு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்:

பன்னெடுங்காலமாகவே, எமது நாட்டில் பாலியல் தொடர்பான குற்றங்கள், மற்றும் சிறுவர் துஷ்பிரயோகங்கள் என்பன தொடர்ந்த வண்ணமேயுள்ளன. மனிதத்துவமற்ற இக்கொடுஞ் செயல்களில் படித்த சமூகத்தை முன்னோக்கி வழிநடத்திச் செல்லத்தக்கவர்களும் ஈடுபட்டுள்ளனர் என்பது, வெட்கித் தலை குனிய வேண்டியதொரு விடயமாகும்.

நாகரீகம் வளர்ந்திராத "காட்டுமிராண்டித்தனமான" காலகட்டத்தில் சமூகம், சமூகமாக மனிதன் தன் வாழ்க்கையை, ஏனையவர்களுடன் பின்னிக்கொண்ட காலத்தில், "பன்மைத் தன்மையான" உறவுகள், அவ்வாதிகால சமூகத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. அப்போது அது வன்முறையான தோற்றப்பாட்டைக் கொண்டிருக்கவில்லை.

பின்னர் காலவோட்டத்தில், நாகரிகம் வளர்ச்சியடைந்த நிலையில், இனம், மொழி, கலை, பண்பாடு, கலாச்சாரம், பிரதேசம் என்பவற்றினூடாக மனிதப் பண்புகளும், வாழ்க்கை நெறிமுறைகளும் வளர்ச்சியடைந்தன. இந்நிலையில், பாலியல் தொடர்பிலான நெறி முறைகளும், சமூக ரீதியில் 'புனிதம்', பெற்றுள்ளதென்பது, இலங்கை, இந்தியா போன்ற தென்கிழக்காசிய நாடுகளின் சிறப்புத்தன்மையென மேல்நாட்டு ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

இவ்வாறு பல்வேறு வகையிலும், 'புனிதம்', பெற்றுள்ள "பாலியல் உறவென்பது, தற்போது பாலியல் பலாத்காரமாக," மாறியுள்ளதென்பது உண்மையிலேயே வேதனை கொள்ள வைக்கிறது. நாகரீகமற்ற முறையில், மிலேச்சத்தனத்துடன், உறவு முறை, நெறி-களை மறந்து, மனிதன் மிருகத்தனமாக நடப்பதென்பது, கடும் கண்டனத்திற்குரியது. சமூகத்தைச் சீர்குலைத்து, எதிர்காலத்தையே கேள்விக்குறியாக்கும் இத்தீய சக்திகள் இனங்காணப்பட்டு வேரறுக்கப்படல் வேண்டும்.

செவனகல பொலிஸ் பிரிவில் 8 வருடங்களுக்கு முன்னர், 14 வயதுடைய சிறுமி மூன்று வெறியர்களால் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டதாக, செவனகலப் பொலிஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர். இங்கு பலாத்காரம் செய்யப்பட்ட சிறுமியின் தாயார் சம்பந்தப்பட்டவர்களிடம் வழக்கை வாபஸ் பெறுவதற்காக 3இலட்சம் ரூபாவைக் கப்பமாகப் பெற்றுள்ளார். 5 வருடங்களுக்கு முன்னர், பதவியிறக்கம் செய்யப்பட்ட பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர், தனது 12 வயது, மற்றும் 13 வயதுடைய மகள்மாரை பாலியல் பலாத்காரம் செய்துள்ளதாக பலாங்கொடை, கல்தோட்ட பொலி ஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர். அண்மையில் திருக்கோயில் பிரதேசத்தில் வயல்வேலை செய்துகொண்டிருந்த மூன்று பெண்களை காடையர் குழுவினர் பலாத்காரம் புரிந்தது, மண்டைதீவில் 4வயதுச் சிறுமி இனந்தெரியாதோரால் பலாத்காரம் செய்யப்பட்டது போன்ற கொடூரமான நிகழ்வுகள் நடந்த வண்ணமேயுள்ளன.

இவை இவ்வாறிருக்க, பாலியல் பலாத்காரம், பாலியல் சித்திரவதைகள், சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகுவோருக்கு உடனடிச் சிகிச்சை அளிப்பதற்காக, சகல வைத்தியசாலைகளிலும் தனியான சிகிச்சைப் பிரிவொன்றை ஆரம்பிக்க, சுகாதார அமைச்சு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் வேண்டுகோளுக்கிணங்க இதற்கென தனியான வார்ட்டுக்கள், அமைக்கப்படவுள்ளதாகவும் சுகாதார அமைச்சு தெரிவிக்கின்றது.

இவ்வாறு எமது சமூகம், குடும்ப வாழ்க்கை, உறவு எனும் கட்டுக்கோப்பிற்குள் எமது புனிதமான தாம்பத்தியம், வரையறை செய்யப்பட்டிருப்பினும், இத்தகைய காட்டுமிராண்டிகளின் காமப்பசிக்கு தாம்பத்தியத்தின் புனிதம், இலக்காகிக்கொண்டிருக்கும் இச்சந்தர்ப்பத்தில், இதை நீடித்துச் செல்லவிடாமல், அரசு, பெண்ணியலாளர்கள், புத்திஜீவிகளுடன் கைகோர்த்து, ஆக்கபூர்வமான காய் நகர்த்தல்களினூடாக இப்பிரச்சினையைக் குறைக்க முடியும் என்பது எமது கருத்து.

# முற்றுப்புள்ளியிடப்பட்ட ஆயுதப்போராட்டம்

## திம்பு - டோக்கியோ வரை

**சென்றவாரத் தொடர்ச்சி.....**



அதாவது, ஒப்பீட்டளவில் பார்த்தால், பொது மக்களுக்கு ஆனையிறவு க்கு ஊடான பயணம் சிரமம் குறைவானது என்பது வெளிப்படை ஆனால், பூநகரி படை முகாமை அகற்றி, சோதனைக் கெடுபிடிகள் இல்லாத போக்குவரத்தை பொதுமக்களுக்கு வழங்க வேண்டுமென புலிகள் பிடிவாதம் செய்தனர்.

இது தவிர, யாழ்ப்பாணக் குடா நாட்டுக்கான மின் விநியோகத்தை மறுசீரமைப்பது பற்றியும், யாழ்ப்பாணப் பொதுநூலகத்தை, மீளக்கட்டியெழுப்புவது குறித்தும் கலந்துரையாடப்பட்டது. மேலும், பேச்சுவார்த்தைகள் சுமூகமாக முன்னேறுவதற்கேற்ற வகையில், போர் நிறுத்தமொன்று பிரகடனம் செய்யப்படவேண்டுமெனப் புலிகள் வலியுறுத்தினர்.

அடுத்து வரும் இரு வாரங்களில், மீண்டும் சந்தித்துப் பேசுவது என்ற முடிவுடன், முதலாவது சுற்றுப் பேச்சுக்கள் நிறைவடைந்தது.

இந்தப் பேச்சுக்கள், மிகவும் திருப்திகரமான முறையிலும் பயன்மிக்கதாகவும் அமைந்திருந்ததாக, அரசுதரப்புத் தூதுக்குழுவின் சார்பில், லயனல் பெர்ணண்டோ உத்தியோகபூர்வமாக அறிவித்திருந்தார். ஆனால், புலிகளின் பிரதிபலிப்பு, வேறு விதமாக இருந்தது. துன்பப்படும் மக்கள் எதிர்நோக்கும் அன்றாடப் பிரச்சினைகள் பற்றி, முதற் கட்டத்திலும், அடிப்படை அரசியல் பிரச்சினைகள் குறித்து, அடுத்த கட்டத்திலும் பேசப்படலாம் என்று, புலிகள் தரப்பில் தந்திரமாக கரிகாலன் பிரகடனம் செய்தார்.

இரண்டாவது சுற்றுப் பேச்சுக்களுக்காக யாழ்ப்பாணம் செல்வதற்கு, அரசாங்கத் தரப்புத் தூதுக்குழு தயாராகிக் கொண்டிருந்தது. கொழும்பின் தொட்டலங்க பகுதியில், ஜனாதிபதித் தேர்தல் பிரச்சாரக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஐ.தே.க.வின் ஜனாதிபதி வேட்பாளரான காமினி திசாநாயக்கா, நள்ளிரவை நெருங்கும் சமயத்தில், தனது உரையை நிகழ்த்தி முடித்துவிட்டு மணிக்கூட்டைத் திரும்பிப்பார்த்தார். மணி 12 ஐத் தாண்டியிருந்தது.

அதனால் இரவு வந்தனங்கள் சொல்வதா, அல்லது காலை வணக்கம் சொல்லி உரையை நிறைவு செய்வதா எனக் கேட்டார். பின்னர் எது எப்படியாயினும் இனிய காலை வணக்கங்கள் எனக் கூறி, உரையை முடித்துவிட்டு மேடையிலிருந்து கீழிறங்க முற்பட்டார்.

அப்போது, திடீரென்று குண்டு வெடித்தது. கொழும்பு நகரில் ஜனாதிபதி பிரேமதாசாவுக்குப் பின்னர், மீண்டும் ஒரு தற்கொலைத் தாக்குதலொன்று நிறைவேறியது.

காமினி திசாநாயக்க, வீரசிங்க மல்லிமாராச்சி, ஒசி அபேய குணசேகர போன்ற முன்னணித் தலைவர்கள் உட்பட, சுமார் 53 முக்கிய பிரமுகர்கள் ஸ்தலத்திலேயே கொலை உண்டனர். சுமார் 100க்கும் அதிகமானவர்கள் காயமடைந்தனர். 1994 அக்டோபர் 23ஆம் திகதி இரவு, இக்குண்டுவெடிப்புச் சம்பவம் இடம் பெற்றிருந்தது. இக்குண்டுத் தாக்குதலை நடத்தியவர்கள், புலிகளே என்பது சுட்டிக்காட்டத்தக்கது.

அப்போது ஜனாதிபதி வேட்பாளராக இருந்த, திருமதி. சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க இத்தாக்குதல் தொடர்பாக, புலிகள் மீது குற்றம் சுமத்த அவசரப்படவில்லை. அரசுத் தகவல்த் துறை ஊடகங்கள், இது ஐக்கிய தேசியக் கட்சியின் உட்பூசலின் விளைவாகக் கூட இடம் பெற்றிருக்கலாம், என்று நம்பும் அளவுக்கு செய்திகளை வெளியிட்டன.

அப்போது, ஐ.தே.க.வின் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த சரத் அமுனுகம, 'அரசாங்கம் அளவுக்கு அதிகமாக புலிகளுக்காக விட்டுக்கொடுக்கிறது' என குற்றம் சுமத்தியிருந்தார்.

காமினிதிசாநாயக்காவின்படுகொலையை அடுத்து, தென் இலங்கையில் நிலவிய பதட்ட சூழல் காரண-மாக, அரசாங்கத் தரப்பு தூதுக்குழு, 24 அக்டோபர் 1994இல் மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்த, யாழ்ப்பாண விஜயம் ரத்துச் செய்யப்பட்டது.

ஜனாதிபதி வேட்பாளர் காமினி திசாநாயக்க கொல்லப்பட்ட போதும்,



தேர்தல் ஒத்தி வைக்கப்படவும் இல்லை. ரத்துச் செய்யப்படவும் இல்லை. ஐ.தே.க.வின் வேட்பாளராக, மறைந்த காமினி திசாநாயக்காவின் விதவை மனைவியான, சிறிமா திசாநாயக்க நிறுத்தப்பட்டார்.

ஜனாதிபதித் தேர்தலில் காமினி திசாநாயக்காவைத் தோற்கடிக்க முடியாது என்பதால், புலிகளுடன் இணைந்து சந்திரிகா திட்டமிட்டுத்தான் இப்படுகொலை நிகழ்த்தப்பட்டது என்பது போல, உணர்ச்சி பூர்வமான பிரச்சாரங்களும் அப்போது முடுக்கிவிடபட்டிருந்தன.

புலிகளுக்கு எதிரான போர் தொடரவேண்டும் என்பதையே, ஐக்கிய தேசியக் கட்சித் தேர்தல் பிரச்சாரத்தின் கருப்பொருளாக்கியது. ஆனால், சமாதானம் ஏற்படவேண்டும் என்பதை எடுத்துரைத்து, சமாதான முயற்சிகளைத் தொடரப் போவதாக, திருமதி சந்திரிக்கா ஆணித்தரமாக



வலியுறுத்திப் பிரச்சாரத்தை முன்னெடுத்தார்.

ஜனாதிபதித் தேர்தல் களத்தில், முன்னர் எப்போதும் இல்லாத அளவுக்கு 62 சதவீத வாக்குகளைப் பெற்று, 9 நவம்பர் 1994இல் திருமதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க, ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார். தேர்தல் முடிவுகளை வரவேற்ற புலிகள், நல்லெண்ண நடவடிக்கையாக, 12 நவம்பர் 1994 இல் ஒரு வார காலத்திற்கு, போர் நிறுத்தம் செய்யப்படும் என்ற அறிவிப்பை, ஒரு-தலைப் பட்சமாக வெளியிட்டனர்.

### கடிதப்பரிமாற்றங்கள்!

புலிகளுக்கும், திருமதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க அரசாங்கத்திற்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள், பெரும்பாலும் கடிதப்பரிமாற்றங்களுக்கு ஊடாகவே மேற்கொள்ளப்பட்டது.

இக்கடிதப் பரிமாற்றத் தூதுவராக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் பணிபுரிந்தது. புலிகளின் ஒருதலைப் பட்சமான, ஒரு வார கால போர்நிறுத்த அறிவிப்புக்கு, முத லில் அரசாங்கம் பதிலளித்தது. 19 நவம்பர் 1994 முதல், இருவார கால போர் நிறுத்தம் கடைபிடிக்கப்படுமென அரசாங்கம் அறிவித்தது.

இதற்கு 20 நவம்பர் 1994இல் புலிகள் பதிலளித்தனர். அப்பதிலில், புலிகளின் மேஜர் தர உறுப்பினரான அருந்தன் என்பவர், நெடுங்கேணியில் படையினரால் கொல்லப்பட்டதாகக் குறிப்பிட்டதுடன், இச்சம்பவம் புலிகள் அறிவித்த போர் நிறுத்த அறிவிப்பை, படையினர் மீறியதாக குற்றம் சுமத்தப்பட்டிருந்தது. மேலும், இச்சம்பவம் தொடர்பாக உடனடியாக விசாரணை நடத்தப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டிருந்தது. இக்கடிதத்திற்கு நவம்பர் 22, 1994 இல் அரசாங்கம் பதிலளித்து இருந்தது.


நெடுங்கேணி சம்பவம் தொடர்பில், அரசாங்கம் எடுத்த நடவடிக்கை திருப்தி தருவதாக தெரிவித்து, நவம்பர் 25, 1994இல் புலிகள் மீண்டும் கடிதம் எழுதினார். இக்கடிதத்தில் பகைமை தவிர்ப்புக்கான உடன்பாடு காண்பதற்கு ஏதுவான பிரச்சினை முன் வைக்கப்பட்டதோடு, இது தொடர்பான வரைவுகள், பேச்சுவார்த்தை மேசையில் இணக்கம் காணப்பட்ட பின்னரே, வெளியிடப்பட வேண்டும் எனவும், கேட்டுக்கொள்ளப்பட்டு இருந்தது.

இக்கடிதத்துக்கு அரசாங்கத்தின் சார்பாக, பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில், அநுருத்த ரத்வத்த டிசம்பர் 7, 1994 இல் பதில் எழுதி-னார்.

தொடரும்...

–இரணியன்–

# சட்டவாக்கத்தினூடாக காய்களை நகர்த்தும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ...



''நிரபராதிகள் மௌனமானால் குற்றவாளிகளே தர்மவான்கள்'' எனும் கதையை நான் கேள்விப்பட்டிருக்கிறேன். இதை இன்று நிதர்சனமாகப் பார்க்க முடிகிறது. இலங்கையின் இன்றைய ஆட்சியாளர்களின் நடவடிக்கைகளால், மிகவும் மதிக்கப்படும் நீதித்துறை, விமர்சனங்களுக்கு அப்பாற்பட்ட நீதித்துறை, இன்று மக்களின் நம்பிக்கையை இழந்த நிலைக்குச் சென்றுள்ளது. நீதிமன்றையோ, அதன் தீர்ப்பையோ விமர்சனம் செய்வது தண்டனைக்குரிய குற்றம், என்றிருந்த நிலை மாறி நீதிமன்ற வரையறைகளையும், சட்டவாக்கம், நிறைவேற்று அதிகாரம் என்பவற்றை மீறிச் செயற்படலாம் என, பதவி விலத்தப்பட்ட உயர்நீதிமன்ற நீதியரசர் விவகாரத்தில், இலங்கையரசு செயற்பட்டமையால் நீதித்துறை நடவடிக்கைகள் இன்று விமர்சனத்துக்குள்ளாக்கப்பட்டிருக்கிறது.

உயர்நீதிமன்றம், மேன் முறையீட்டு நீதிமன்றம், ஆகியவற்றின் தீர்ப்புக்களை உதாசீனம் செய்தது. நீதிமன்ற தீர்ப்புக்கு எதிராக பிரதம நீதியரசரை நீக்கியது வரை, இந்த அரசாங்கமே நீதித்துறையை பலவீனப்படுத்தியுள்ளது. நீதித்துறையையும் அதன் தீர்ப்புக்களையும் மதிக்கவில்லை என்றால், நாட்டில் சட்டம், ஒழுங்கு, சட்டத்திற்குட்பட்ட வாழ்வு எதுவுமே இருக்காது. சட்டத்தையும், நீதியையும், அதன் தீர்ப்பையும் மதித்து நடப்பதற்கு, முன் உதாரணமாக அரசாங்கமே நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஆனால் இன்று அரசாங்கமே இவை அனைத்தையும் மீறிவிட்டது. நீதிமன்றை விமர்சித்து, பொதுக்கூட்டம் ஒன்றில் உரையாற்றினார் என்ற குற்றத்திற்காக, இன்றைய உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி திசாநாயக்கா சிறைத்தண்டனையை அனுபவித்ததையும், அதன் பின்னர் ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ், மன்னிப்பளிக்கப்பட்டு விடுதலையான வரலாற்றையும், நாம் மறந்துவிட முடியாது.

ஆனால் இன்று உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு, மேன்முறையீட்டு மன்றின் உத்தரவு என, அனைத்தையும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவும், சபாநாயகரும் உதாசீனம் செய்ததையும், நீதிமன்றில் ஆஜராகுமாறு நீதிமன்றம் விடுத்த உத்தரவை உதாசீனம் செய்ததையும் நாம் காண்கின்றோம்.

குற்றப்பிரேரணையை விசாரிப்பதற்கு நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழு சட்டரீதியற்றது, அதன் முடிவும் செல்லுபடியற்றது என, மேன் முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்த போதும், அதன் தீர்ப்பை அரசாங்கம் தூக்கி வீசிவிட்டு, தாம் நினைத்ததை நிறைவேற்றியிருக்கிறது.

கொழும்பில் நடந்த ஊடகவியலாளர் மாநாட்டில் பேசிய, நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர ஐ.நாவில் பொய் கூறிய ஒருவரையே, மஹிந்த ராஜபக்ஷ பிரதம நீதியரசராக நியமித்திருக்கிறார் எனக் கூறியிருந்தார். இது போன்ற பல விமர்சனங்களை புதிய பிரதம நீதியரசர் எதிநோக்க வேண்டி ஏற்படலாம்.

ஏனெனில் நீதித்துறையை விமர்சிக்கலாம், எள்ளி நகையாடலாம், அல்லது தீர்ப்பை உதாசீனம் செய்யலாம் என்ற நிலையை உருவாக்கியது பொதுமக்களல்ல, இன்றைய அரசாங்கம் தான். அநியாயமான முறையில் அவதூறு செய்யப்பட்டு பழிசுமத்தப்பட்டவராக எதுவித ஏதுக்களுமின்றி உதறி எறியப்பட்டவளாக நான் இன்று உங்கள் முன்னிலையில் நிற்கிறேன் என பதவி நீக்கம் செய்யப்பட்ட கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்கா வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்திருந்தார்.

அரசாங்கத்தின் சர்வாதிகார, எதேச்சாதிகாரத்தின் உச்சக்கட்டமாக இந்தப் பதவி நீக்கமும், பழி சுமத்தல்களும் இடம்பெற்றுள்ளன. இந்தப் பதவி நீக்கத்திற்கு ஷிராணி பண்டாரநாயக்காவின் மீது சுமத்தப்பட்ட மோசடிக் குற்றச்சாட்டுத்தான் காரணம், என அரசாங்கம் கூறினாலும், உண்மை அதுவல்ல என்பது பெரும்பாலானவர்களுக்குத் தெரியும். கொடுக்கப்பட்ட அழுத்தங்களுக்கு ஈடுகொடுத்து, நான் சுதந்திரமான நீதித்துறைக்காகப் பாடுபட்டதால் தான், இன்று பாதிக்கப்பட்டுள்ளேன். சட்டத்தின் ஆட்சி மேலோங்கி நிலைநிறுத்தப்பட்டிருந்தால், இவ்வாறான அநீதியான முறையில் நான் தண்டிக்கப்பட்டிருக்கமாட்டேன் என ஷிராணி பண்டாரநாயக்கா வெளியிட்ட அறிக்கையில் சுட்டிக்காட்டியிருந்தார்.

உண்மையில் இரு முக்கியமான தீர்ப்புக்களே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கும் அவரது சகாக்களிற்கும் கடும் சீற்றத்தை ஏற்படுத்தியிருந்தது. மாகாண சபைகளுக்கு வழங்கிய அதிகாரங்களைப் பறித்தெடுத்து பொருளாதார அபிவிருத்தி அமைச்சரான பஷில் ராஜபக்சவின் கைகளுக்கு வழங்கும் 'திவிநெகும' சட்டமூலம் பாராளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டபோது, அதற்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில், சகல மாகாண சபைகளிலும் அங்கீகாரம் பெற்ற பின்னரே, நாடாளுமன்றில் பிரேரணையைச் சமர்ப்பிக்கமுடியும் என, உயர்நீதிமன்றம் முதலாவது தீர்ப்பை வழங்கியிருந்தது.

வட மாகாணசபை தவிர்ந்த ஏனைய எட்டு மாகாண சபைகளிலும், "திவிநெகும" சட்டத்திற்கு ஆதரவான தீர்மானம் எடுக்கப்பட்ட நிலையில், மக்கள் பிரதிநிதிகளின் நிர்வாகத்தில் இல்லாத, வடமாகாண சபையின் அங்கீகாரத்தை அந்த மாகாணசபையின் ஆளுநர் சந்திரசிறி வழங்கியிருந்தார்.

இதனை ஆட்சேபித்து நாடாளுமன்ற உறுப்பினர், மாவை சேனாதிராஜா தாக்கல் செய்திருந்த வழக்கில், வடக்கு மாகாண ஆளுநர் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டவரே தவிர, மக்கள் பிரதிநிதி அல்ல.

எனவே மாகாண-சபையின் அங்கீகாரமாக, ஆளுநரின் கையொப்பத்தைக் கருத முடியாது என்றும், மாகாணசபையின் தீர்மானங்களை ஆளுநர் எடுக்க முடியாது, என்ற முக்கியமான தீர்ப்பையும் உயர்நீதிமன்றம் வழங்கியிருந்தது. இந்த இரு தீர்ப்புக்களுமே, மஹிந்த தலைமையிலான அரசாங்கத்திற்கு நெருக்கடியாக அமைந்தது.

அதுவும் தனது சகோதரர் பஷில் ராஜபக்ஷவின் அமைச்சுக்கு, அதிகாரங்களை வழங்குவதற்கு நீதித்துறை தமக்குச் சாதகமாக ஒத்துழைக்கவில்லை, என்ற சீற்றம் மஹிந்த ராஜபக்ஷவிற்கு ஏற்பட்டது. இதன் விளைவே பிரதம நீதியரசராக இருந்த ஷிராணி பண்டாரநாயக்காவின் பதவி பறிக்கப்பட்டு, அவர் தூக்கயெறியப்பட்ட நிலையில், பல்வேறு விமர்சனங்களுக்கு ஆளாகி நிற்கின்ற முன்னாள் சட்டமா அதிபர் மொஹான் பீரிஸ் பிரதம நீதியரசராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

பிரதம நீதியரசர் உயர்நீதிமன்ற நீதியரசர்களில், மூப்பு அடிப்படையிலேயே நியமிக்கப்படுவது வழக்கமாகும். ஆனால் அந்த வழக்கங்களை மீறி, எந்தவொரு காலத்திலும், நீதிபதியாகக் கடமையாற்றாத ஒருவர், எடுத்த எடுப்பிலேயே பிரதம நீதியரசராக நியமிக்கப்பட்டிருப்பது பற்றியும், விமர்சனங்கள் எழுந்துள்ளன.

அதற்கு அப்பால், ஐக்கியநாடுகள் சபை போன்ற, உயர்ந்த சபையில் சர்வதேச நாடுகளுக்குப் பொய்யொன்றைக் கூறி, சர்வதேச நாடுகளுக்குப் பிழையான தகவல் ஒன்றை வழங்கினார் என்ற குற்றச்சாட்டு தற்போது பிரதம நீதியரசராக நியமிக்கப்பட்டிருக்கும் 'மொஹான் பீரிஸ்' மீது, சர்வதேச மன்னிப்புச்சபை உட்பட, பல்வேறு மனித உரிமை அமைப்புக்களும், குற்றம் சாட்டி வந்தன. காணாமல் போன ஊடகவியலாளர் 'எகிலியகொட' வெளிநாடு ஒன்றில் வாழ்கிறார் என ஐ.நா சபையில் மொஹான் பீரிஸ் கூறிய தகவல், பொய் எனப் பின்னர் நிரூபிக்கப்பட்டது.



அவ்வாறு சர்வதேச நாடுகள் மத்தியில் பொய் கூறிய ஒருவரை, சிறிலங்கா அரசாங்கம் பிரதம நீதியரசராக நியமித்திருப்பதாக இப்போது குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன. நீதித்துறை மீது சிறிலங்கா அரசாங்கம் மேற்கொண்ட, சர்வாதிகார அழுத்தங்களை எதிர்த்து, சட்டத்தரணிகள் தம் எதிர்ப்பை வெளிப்படுத்திய போதும், எதிர்க்கட்சிகளோ, பொதுமக்களோ பெரியளவில் எதிர்ப்பை வெளிப்படுத்தவில்லை.

மேற்குலக நாடுகளில் இருக்கும் தமிழர்களும், இந்தவிடயத்தை சரியாக அரசியல் மயப்படுத்த முன்வரவில்லை. மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம், அதிகாரப் பரவலாக்கலுக்கோ, அல்லது தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வை வழங்குவதற்கோ, தயாரில்லை என்பதை அண்மைய சம்பவங்கள் மூலம் தெளிவாகப் புரிந்து கொள்ளமுடியும். இதை மேற்குலக நாடுகளில் வாழும் தமிழர்கள், சரியாகப் பயன்படுத்தியிருக்க முடியும். ஆனால் அவர்கள் இது எதையும் விளங்கிக் கொள்ளாதவர்களாக உள்ளனர்.

உயர்நீதிமன்றம் வழங்கிய இரு தீர்ப்புக்களும், அதிகாரப் பரவலாக்கத்துக்குச் சார்பானதும், ஆளுநர்களின் தன்னிச்சையான அதிகாரங்களைத் தடுக்கும் வகையிலேயே அமைந்திருந்தது. ஆளுநர் என்பவர் நியமனம் செய்யப்பட்டவரே ஒழிய, மக்களால் தெரிவு செய்யப்பட்டவர் அல்ல, எனவே மாகாணத்தின் முக்கிய முடிவுகளை, ஆளுநரால் தீர்மானிக்க முடியாது என வழங்கப்பட்ட தீர்ப்பை வடக்கு, கிழக்கில் உள்ள தமிழர் தரப்பு எவ்வளவுதூரம் பயன்படுத்திக்கொண்டது. உதாரணமாக வடக்கில் உள்ள ஆளுநர், மேற்கொண்டு வரும் தன்னிச்சையான முடிவுகளுக்கு, எதிராக ஏற்கனவே அளிக்கப்பட்ட தீர்ப்பை உதாரணமாகக் கொண்டு, வழக்குத் தாக்கல் செய்திருக்க முடியும்.

இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் பயனாக கொண்டுவரப்பட்ட, 13 ஆவது திருத்தச்சட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்ட, மாகாணசபை முறை வடக்கு, கிழக்கைத் தவிர ஏனைய மாகாணங்களில் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டுவருகிறது. அந்த மாகாணங்கள், காணி அதிகாரங்கள் உட்பட மாகாணங்களுக்கு உரிய அதிகாரங்களைப் பயன்படுத்தி வருகின்றன.

2002 க்குப் பின்னரான ஐக்கிய தேசிக்கட்சி ஆட்சிக்காலத்தில், காணி அமைச்சராக இருந்த 'ராஜித சேனாரத்ன' வடமத்திய மாகாணத்தின் காணி விடயங்களில் தலையிட்ட போது, தலைமை அமைச்சராக இருந்த 'பேர்ட்டி பிறேம்லால் திசாநாயக்கா' உயர் நீதிமன்றத்தில் வழக்கொன்றைத் தாக்கல் செய்திருந்தார். அந்த வழக்கின் தீர்ப்பில், மாகாண சபைக்குரிய காணி அதிகாரங்களில், மத்திய அரசாங்கம் தலையிட முடியாது என நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது.

வடமாகாணத்தில் மக்கள் பிரதிநிதிகள் இல்லை என்று வைத்துக்கொண்டாலும், கிழக்கு மாகாணத்தில் கடந்த 5வருடங்களுக்கு மேலாக முதலமைச்சர் தொடக்கம், பிரதிநிதிகள் உள்ளனர். ஆனால் மாகாணங்களுக்குரிய அதிகாரங்களை, மத்திய அரசு பறித்துக்கொண்டுள்ளது என, முன்னால் முதலமைச்சராக இருந்த சிவனேசதுரை சந்திரகாந்தன் அவர்களோ அல்லது இப்போது இருக்கும் நஜீப் ஏ.மஜீத்தோ வாய் திறப்பதில்லை. ஏனெனில் அவர்கள் அரசின் நண்பர்களே.


கிழக்கு மாகாணத்தில் மக்களால் தெரிவு செய்யப்பட்டிருக்கின்ற ஒரு சபை இருக்கின்ற போதிலும் அங்கு முழுக்க, முழுக்க ஆளுநர் ஆட்சியே நடைபெறுகிறது. உரிமையும், விடுதலையும் வெறும் ஆயுதப் போராட்டத்தின் மூலமோ, அல்லது வெற்றிக் கோசங்களின் மூலமோ வந்துவிடப் போவதில்லை. குற்றவாளிகளையும், கொலைகாரர்களையும் தங்கள் பிரதிநிதிகளாக தெரிவு செய்யும் மடமையிலிருந்து விடுபட்டு, மக்கள் அரசியல் எழுச்சி நடைபெறுவதன் மூலமே அந்த இலக்கை அடைய முடியும்.

முக்கியமாக ஷிராணி பண்டார நாயக்காவின் விடயத்தை தமிழர்கள் சரியான முறையில் சர்வதேச மயப்படுத்தியிருக்க முடியும். மஹிந்த ராஜபக்ஷ அதிகாரப் பகிர்வுக்குத் தயாரில்லை என்பதை அம்பலப்படுத்தியிருக்க முடியும்.

ஆனால் உள்ளூரிலிருக்கும் தமிழர் தலைமைகளும் சரி, மேற்குலக நாடுகளில் செயற்படும் தமிழ் அமைப்புக்களும் இந்தவிடயத்தைச் சரியாகக் கையாளத் தவறிவிட்டன.

**– சுவிஸிலிருந்து**
**இரா.துரைரெத்தினம் –**

# இலங்கைத் தீவானது இந்தியா, சீனா போன்ற நாடுகளின் தரிப்பிடமே.



சிறீலங்காவுக்கும் சீனாவுக்கும் இடையில், இறுகிவரும் பொருளாதார மற்றும் பாதுகாப்பு உறவுகள், இந்தியாவின் பிராந்திய மேலாதிக்கநிலைக்கும், தேசிய பாதுகாப்புக்கும், பாரிய சவாலாக உருவாகி வளர்ந்து வருகின்றது என்பதனை, புதுடெல்லியில் உள்ள அதிகாரக்கட்டமைப்பு தொடக்கம், சாதாரண இந்தியக் குடிமகன்வரை, அனைவரும் புரிந்துள்ளனர்.

இதே கருத்தினையே, பூகோள அரசியற்போக்குகளின் தொடர்ச்சியாக அவதானித்துவரும், பலதேசத்து அரசியல் ஆர்வலர்களும் கொண்டுள்ளனர்,

சிறீலங்காவின் ஆட்சியாளர்கள், தற்போது கையாளும் இருமுனை இராஜதந்திர அணுகுமுறை, 1948இல் பிரித்தானியரிடமிருந்து ஆட்சியதிகாரத்தினைக் கையேற்ற காலத்திலிருந்து, சிங்கள மக்களின் தேசியத்தலைவர்களால், தொடர்ச்சியாக வலுவூட்டப்பட்டு வளர்த்தெடுக்கப்பட்ட, தூரநோக்கங்கொண்ட செயன்முறையாகும். இதனை மஹிந்த ராஜபக்சவின் தலைமையிலான, ஆட்சியின் கொள்கையாக மட்டும் விளங்கிக்கொள்ள முயற்சிப்பது பொருத்தமற்றது. பலமான எதிரியைக் கையாளுவதற்கு, “எதிரியின் எதிரி நண்பன்” என்கின்ற அடிப்படையில் உருவாக்கப்படுகின்ற, கூட்டான அரசியற்பலம் இன்றியமையாதது. இத்தகைய எதிர்க்கூட்டணி அரசியல் மூலம், அச்சுறுத்த முற்படும் எதிரியை, எதிர்கொண்டு கையாளுவதற்கான, பேரம்பேசும் பலம் சிறிய தேசங்களுக்குக் கிடைக்கும்.

இந்தியா தொடர்பாக, சிங்கள மக்கள் கொண்டுள்ள விகாரமான மனப்பதிவு, ‘மஹாவம்சம்’ என்கின்ற வரலாற்று நூலில் குறிப்பிடப்படும், வரலாற்றுச்சம்பவங்களுடன் தோற்றம் பெறுகிறது. காலங்காலமாக இந்தியாவின் மன்னர்களால், இலங்கைத்தீவின் மீது நிகழ்த்தப்பட்ட படையெடுப்புக்கள், அதனைத்தொடர்ந்து வந்த சமய, கலாசார, பண்பாட்டு அழுத்தங்கள் ஆகியவை, இலங்கைத்தீவில் வாழ்ந்த மக்களின் (சிங்கள பௌத்தர்கள்) தனித்துவத்திற்கும், அவர்களின் இறைமைக்கும் அச்சுறுத்தலாக இருந்தது, இருக்கின்றது. எதிர்காலத்திலும் இருக்கும், என சிங்களமக்களும் அவர்களின் தலைமைகளும், முழுமையாக நம்புகிறார்கள்.

எனவே பரந்த இந்தியாவின் அழுத்தத்திலிருந்தும், அச்சுறுத்தத்திலிருந்தும், தங்களைப் பாதுகாப்பதற்காக இந்தியாவின் எதிர்சக்திகளுடன், நட்புறவினை வளர்த்துக்கொண்டு, தங்களது பேரம்பேசும் திறனை, சிறீலங்காவின் தலைவர்கள் கட்டியெழுப்பினார்கள். தற்போது சீனாவுடன், சிறீலங்கா கொண்டுள்ள உறவும் இதன் தொடர்ச்சியேயாகும்.

சிங்கள மக்கள் தங்களின் பெருந்தந்தை எனக் கூறிக்கொள்ளும் விஜயனும், அவனது 700 தோழர்களும், இந்தியாவிலிருந்து நாடுகடத்தப்பட்டு இலங்கைக் கரையில் ஒதுங்கியவர்களே. இலங்கை மண்ணில் வாழ்ந்த குவேனியினை மணந்து, பின் வெறுத்தொதுக்கி அவளையும், அவளுடன் தனக்குப் பிறந்த இரண்டு பிள்ளைகளினையும் காட்டிற்குள் விரட்டிவிட்ட விஜயனுக்கும், அவனது தோழர்களுக்கும் அடைக்கலம் கொடுத்து, இளவரசியையும் மணமுடித்துக் கொடுத்தது இந்தியாவின் பாண்டிய நாடுதான் என்பதனை, சிங்களமக்களும் அதன் வரலாற்றாசிரியர்களும் மறக்கவில்லை.

நேபாளத்தின் ‘லும்பினிதேசத்து’ அரசகுமாரனாகப் பிறந்து, இந்தியாவின் பீகார் மாநிலத்தில், ‘புத்தகாய’ என இன்று அழைக்கப்படும் இடத்தில், ஞானமடைந்த கௌதமபுத்தரின் போதனைகளையும், பௌத்த தர்மத்தினையும், இலங்கைக்கு அறிமுகஞ்செய்து வைத்ததும், இந்தியாவிலிருந்து வந்த மஹிந்த தேரரும், சங்கமித்தையும் அவரைத் தொடர்ந்தவர்களுமேயாகும். இலங்கைத் தீவின், சிங்களமக்களின் பூர்வீகங்கள் யாவும், இந்தியாவையையே மூலமாக கொண்டுள்ளது என்கின்ற வாதம், ஏற்புடையதாக வரும்போது, இந்தியாவுக்கும் இலங்கைத் தீவின் சிங்கள பௌத்த மக்களுக்கும், இடையிலான நெருக்கம் வெளிப்படையான தொப்புள்க்கொடி உறவாகவே உள்ளது.


சிறீலங்காவிற்கும் இந்தியாவின் எதிர்நிலை நாடுகளுக்குமான உறவு, இதற்கு முற்றிலும் எதிர்மாறானதே. சிறீலங்காவிற்கும், பாகிஸ்தானுக்கும், ஏனைய இஸ்லாமிய நாடுகளுக்கும் இடையில், கட்டிவளர்க்கப்பட்டுள்ள உறவுகள், வெறும் பொருளாதார இராஜதந்திர உறவுகளே, உற்நாட்டினுள் வாழும் இஸ்லாமிய சமூகத்தின் மீதும், அவர்களது மார்க்க உரிமைகளின் மீதும், சிங்கள பௌத்த தேசியவாத சக்திகள் உறவுகளைப் பேணுவதென்பது, இஸ்லாமிய நாடுகளுடன் கொண்டுள்ள, வெறும் வலுச்சமநிலையினை தக்கவைப்பதற்கான, பந்தய விளையாட்டாகவே இவ்விடயம் உள்ளது. சீனாவுக்கும் இலங்கைக்குமான உறவை நோக்கும் போது, அதுவும் ஒரு வலுச்சமநிலைப் பந்தயமாகவே உள்ளது. சீனாவின் ஆட்சியாளர்கள், சிறீலங்காவைத் தங்களது நலன்களுக்கான, பகடைக்காயாகவே பயன்படுத்துகின்றனர். மாற்றமடைந்து வரும், பூகோள அரசியற்பொருளாதார உறவு நிலைக்கும், உலகத்தின் விரிந்த சந்தைப்போட்டிக்கும், ஈடுகொடுப்பதற்காக சீனா தன்னை மாற்றிவருகின்றது. அதன்பொருட்டு சீனா, உலகந் தழுவியதான வளங்களினை வேட்டையாடும் போட்டியில் தற்போது இறங்கியுள்ளது.

இத்தகைய நிலையில் இலங்கைத்தீவு என்பது, சீனாவுக்கு ஒரு தரிப்பிடம் மட்டுமே. சீனாவைத் திருப்திப்படுத்தக்கூடியளவுக்கு, இலங்கைத்தீவில் வளங்களோ, அல்லது நுகர்வோரின் எண்ணிக்கைப் பலமோ இல்லை. தனது பொருளாதார நலன்களுக்கும் அப்பால் சென்று, சிறீலங்காவினைக் காப்பாற்றுமளவிற்கு, சீனாவைத் தூண்டக்கூடிய வேறு பலமான அரசியற் பண்பாட்டுக் காரணிகளும் இல்லை. பெருந்தலைவர் மாவோவுடைய கம்யூனிச அணிகளில் ஒன்றாகவும் சிறீலங்கா இல்லை. சீனாவும் சிறீலங்காவும், பௌத்த தர்மத்தினைப் பின்பற்றும் மக்களினைப் பெருமளவில் கொண்டிருந்தல் ஒன்றே பொதுவானதாகவுள்ளது. எனவே தேவைப்படும்போது, சீனா சூடான் நாட்டைக் கைவிட்டது போன்று, சிறீலங்காவையும் கைவிடுவதற்கான வாய்ப்புக்களை இல்லையென மறுப்பதற்கில்லை.

சீனாவுக்கான மூலவள கடற்போக்குவரத்துப் பாதையில் உள்ள தரிப்பிடங்களில் ஒன்றாக, சிறீலங்காவின் துறைமுகங்களும், அதன் ஆள்புல கடல் எல்லையும், தற்போது முக்கியம் பெறுகின்றது. எனினும் கப்பல் கட்டும் பொறியியல் கண்டுள்ள அபாரவளர்ச்சியையும், பாரிய அளவு சரக்குக் கொள்கலன்களினை நீண்ட தூரத்திற்குக் காவக்கூடிய ‘Triple E’ வகையிலான கொளகலன்கள் காவும் கப்பல்களின் அறிமுகமும், சிறீலங்காவின் துறைமுகங்களின் தரிப்பிட முக்கியத்துவத்தைக் குறைத்துவிடும்.

மறுபுறத்தில் யுத்தஆயுத தயாரிப்பில், அறிமுகப்படுத்தப்பட்டுவரும் நவீன மாற்றங்களும், பாரிய விமானந்தாங்கிக் கப்பல்களும், ஏவுகணைகளின் பெருக்கமும், உளவுத் தொழில்நுட்பத்தில் செயற்கைக்கோள்களும், ஆளில்லா உளவு விமானங்களும், ஏற்படுத்தியுள்ள அதியுயர் சாதனைகளும், எதிரியின் கொல்லைப்புறத்திற்கு, நெருக்கமாக தளம்தேடும் தேவையினை, இல்லாது ஒழித்துள்ளது. எனவே இந்தியாவை உளவறிவதற்காக, சீனா சிறிலங்காவில் கால் ஊன்றவேண்டிய தேவை உள்ளது. என்ற வாதம் கேள்விக்கு உட்படுத்தப்படவேண்டிய ஒன்று.

சீனாவுக்கும் இந்தியாவுக்கும் இடையில், பலமுனைப் போட்டியுள்ளது. இரண்டு தேசங்களுக்கும் இடையிலான எல்லைகள், அதனோடிணைந்த பிரதேசங்கள் தொடர்பாக, கடந்த காலத்தில் இருநாடுகளும் போரிட்டன. இன்றுவரை எல்லைப்பிரச்சனை தீர்க்கப்படாமல் இருந்தாலும், இன்னுமொரு யுத்தத்தில் சந்திப்பதை, இரண்டு நாடுகளுமே தவிர்த்து வருகின்றன என்பதுவே உண்மை. ஏனெனில் யுத்தத்தில் பிரவேசிப்பதன் மூலம், தாங்கள் அடைந்துள்ள பலதுறை மேம்பாடும், கட்டுமானங்களும், அழிக்கப்படுவதை இரு நாடுகளுமே விரும்பவில்லை. மற்றொரு முனையில், எண்ணெய்யும் எரிவாயு வளமும் கொண்ட, தென்சீனக்கடலின் மீது, பலநாடுகள் கொண்டிருக்கும் உரிமை மீதான போட்டியினுள், தற்போது இந்தியாவும் பிரவேசித்துள்ளது.



சீனாவின் அண்டைநாடான வியட்நாம் நாட்டுடன், இந்தியா செய்து கொண்ட ஒப்பந்தத்தின் கீழ், தென்சீனக்கடலில் எண்ணெய் மற்றும் எரிவாயு ஆராச்சியிலும், அகழ்விலும் இந்தியா ஈடுபட்டுள்ளது. இது சீனாவுக்கும் இந்தியாவுக்குமான, புதிய முரண்பாடு முனையாக மாறியுள்ளது. தென்சீனக்கடலில், எண்ணெய் அகழ்வாய்வில் ஈடுபட்டுள்ள, இந்தியக் நிறுவனங்களின் கப்பல்களுக்கு, சீனாவின் அச்சுறுத்தலிலிருந்து பாதுகாப்பு வழங்குவதற்காக, தேவைப்படின் இந்திய கடற்படைக்கப்பல்கள் அத்திசை நோக்கி நகரும் என, இந்தியக் கடற்படைத்தளபதி அண்மையில் கருத்து உரைத்திருந்தார்.

வியட்நாம் ஊடாக, சீனாவின் கொல்லைப்புறத்தினுள், இந்தியா செல்வதும் சிறீலங்காவின் ஊடாக, இந்தியாவின் தென்முனைக் கொல்லைக்குள் உள்வருவதும், வல்லரசுகளின் வலுச்சமனிலை விளையாட்டின் ஒரு நிலையே. ஆனால் இவையெல்லாம் சதுரங்க ஆட்டத்தில், முன்னும் பின்னும் நகர்த்தப்படும் காய்களே. இரண்டு வல்லரசுகளும் தமது நலன்களுக்காக, சமரசம் செய்ய முற்படும்போது, சிறியதேசங்களும் அவற்றின் நலன்களும், பலிக்கடாவாக்கப்படுன்றது. சீனாவின் ஆதிக்கம் சிறிலங்காவின் தென்பகுதித் துறைமுகங்களினூடாக விரிவாக்கம் செய்யப்படும்போது, அது இந்தியாவின் தேசிய பாதுகாப்பிற்கும் ஆபத்தாக மாறும். அத்தகைய நிலை ஏற்படும்போது , இந்தியா சீனாவின் விரிவாக்கத்தினைக் கட்டுப்படுத்துவதற்காக, இலங்கைத் தீவை கூறுபோட முனையும், இந்நிலை ஈழத்தமிழர்களுக்கான ஒரு சாதகமான புறநிலையை உருவாக்கும். இந்நிலமை இந்தியாவின் தென்முனையில் அதன் பாதுகாப்பு அரணாக இருக்கும்” என்ற வாதங்கள் தற்போது முன் வைக்கப்படுகின்றன.



இத்தகைய வாதம் பல வினாக்களை எம்மிடையே தோற்றுவிக்கின்றது. மேற்கூறிய வாதத்தின் படியே, சீனாவின் விரிவாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்காக, இலங்கைத்தீவினை இந்திய சார்பு நாடாக மாற்றியமைப்பதற்கான முன்னகர்வுகளை, இந்தியா மேற்கொள்ளும் அதேவேளை, இதற்கு எதிர்மறையான காய் நகர்த்தல்களை சீனா திரைமறைவில் மேற்கொள்ளும். இத்தகைய நிலைப்பாடுகள் இலங்கை அரசுக்கு தர்ம சங்கடமானதொரு நிலையை ஏற்படுத்தும். அமெரிக்கா வல்லரசுக்குச் சவால்விட்ட கியூபா தேசம் போல, சிறீலங்கா இருக்க இந்தியா அரசு அனுமதிக்காது. மாறாக முழு இலங்கைத்தீவிற்கும் வெளியே, சீனாவைத் தள்ளுவதன் மூலம், தென்முனையில் 4000 கிலோ மீற்றர்களுக்கு அப்பால், சீனாவின் இருப்பை உறுசெய்துகொள்ளவே, இந்தியா எத்தனிக்கும். அக்குறிக்கோளினை அடைவதற்கு, இந்தியாவிற்கு உள்ள ஒரேயொருவழி, சிறீலங்காவினைத் தனது நட்பு நாடாக வைத்துக்கொள்வதே. அண்மையில் இந்தியத் தளபதியின் சிறீலங்கா சுற்றுப்பயணத்தின்போது, சிறீலங்காவின் அதி உயர் இராணுவபீடத்தினர் காட்டிய, பணிவுமிகு வரவேற்பு அவர்களுக்கிடையில் இருக்கின்ற, ஆத்மார்த்த ரீதியான நட்புறவினையே பிரதிபலித்தது.

ஆகவே சிறீலங்காவுடன் பல விதமான விட்டுக்கொடுப்புக்களைச் செய்ய, இந்தியா ஒருபோதும் பின்னிற்காது. அத்தகைய பேரம் பேசலின்போது, சிறீலங்கா சீனாவுடனான நெருக்கத்தைப் பெரிதுபடுத்திக் காட்டுதல் ஊடாக, அதிக நன்மைகளை இந்தியாவிடமிருந்து பெறமுயற்சிக்கும். அப்போது மீண்டும் ஒருமுறை, ஈழத்தமிழர்களும் அவர்களின் உரிமைகளும் நலன்களும், இந்தியா என்கின்ற வல்லாதிக்க சக்தியால், சிறீலங்காவின் பீடத்தில் பலிகொடுக்கப்படும் புறநிலைமைகளும் காணப்படுகின்றன. இந்த தர்க்கவியல் உண்மையைப் புரிந்துகொள்ளாமல், அர்த்தமற்ற வாதங்களை முன்வைப்பது, ஈழத்தமிழர்களை ஏமாற்றும் மற்றொரு முயற்சியாகவே அமையும். இத்தகைய தர்க்க ரீதியிலான உண்மைகளையும், தமிழ்த் தலைமையகம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

– ஆகாஷ்–

# தீர்க்க தரிசி தந்தை செல்வாவின் தலைமைப்பேருரை...

சென்றவாரத்தொடர்ச்சி....

இவ்வித சச்சரவுகளை நீக்குவதற்கு இரண்டு வழிகள் இருக்கின்றன. ஒன்று, மொழி வாரியாகப் பிரிக்கப்பட்ட பூரண சுதந்திர அரசுகளை அமைப்பது; இதிலும் பார்க்கத் தீவிரங் குறைந்ததான மற்றைய வழி, மொழிவாரிச் சுயாட்சி மாகாணங்களை அமைத்து, அவற்றை இணைக்கும் ஒரு மத்திய அரசாங்கத்தையுடைய சமஷ்டி அரசை ஏற்படுத்துவதே. இவ்விரு முறைகளையும் கையாளுவதற்கு, வெவ்வேறு மொழிபேசும் இனங்கள், பிரிக்கப்படக்கூடிய பிரதேசங்களில் வாழுதல் வேண்டும். சமஷ்டி அரசியலானது, உலகிற் பல பாகங்களிலும் இவ்வித பிரச்சினைகளை, வெற்றிகரமாகத் தீர்த்துவைத்திருக்கின்றது.

பிரெஞ்சு - ஆங்கில மொழிகளைப் பேசும் மக்களைக் கொண்ட கனடா தேசமும், ஜேர்மன், பிரெஞ்சு -இத்தாலிய மொழிகளைப் பேசும் சுவிற்சலாந்து தேசமும் இதற்கு நல்ல உதாரணங்களாகும். ரஷ்ய தேசத்திலும் சுயாட்சி கொண்ட மொழிவாரி மாகாணங்களே அமைக்கப்பட்டிருக்கின்றன. அங்கே ஒரு தனியான பிரதேசத்தில் வாழும், ஒவ்வொரு மொழிபேசும் மக்களும், ஒரு தனித் தேசிய இனத்தினராகக் கருதப்படுகின்றனர்.

இந்தியாவிலும், இந்திய தேசியக் காங்கிரசும் இந்திய அரசாங்கமும், மொழிவாரி மாகாணங்களை அமைக்க வேண்டுமென்ற கொள்கையை, ஏற்றுக்கொண்டு, அப்படியே அமைத்தும் வருகின்றார்கள். தனி ஆந்திர மாகாணமொன்றும் உருவாகின்றது. கன்னடர் தமக்கொரு மாகாணம் வேண்டுமென்று கிளர்ச்சி செய்கின்றனர். இவையெல்லாம் ஒவ்வொரு மொழிவாரி இனமும் தன்னைத்தானே பாதுகாக்க விரும்பும் இயற்கையுணர்ச்சியின் பயனாக ஏற்பட்டவையேயாகும்.

யாம் கோருவதும் இதுதான். ஒரு சுயாட்சித் தமிழ் மாகாணமும், ஒரு சுயாட்சிச் சிங்கள மாகாணமும் அமைத்து, இரண்டுக்கும் பொதுவானதோர் மத்திய அரசாங்கமுள்ள - சமஷ்டி முறை இலங்கையில் ஏற்படவேண்டும். தமிழ் பேசும் தேசிய இனம், பெரிய தேசிய இனத்தால் விழுங்கப்பட்டு அழியாதிருக்க வேண்டுமேயானால், இவ்வித சமஷ்டி ஏற்படுவது அவசியமாயிருக்கிறது.

தமிழ் பேசும் பிரதேசங்களை இலகுவாகப் பிரித்து விடலாம். இடையிடையே இரு மொழிகளைப் பேசும் மக்களும் கலந்து வாழும் பிரதேசங்களும் உண்டு. ஆனால் இதைக் காரணமாகக் கொண்டு, ஒவ்வொரு மொழியைப் பேசும் மக்களும், பெரும்பான்மையாக வசிக்கும் பிரதேசங்களை, சுயாட்சி மாகாணங்களாக வகுப்பதற்குத் தடை ஏற்படக்கூடாது. சமஷ்டி அரசியலால்



ஒருவரும் நஷ்டமடையப்போவதில்லை. நிச்சயமாகச் சிங்கள மக்கள் நஷ்டமடையவே மாட்டார்கள். ஏனென்றால், இது பெரும்பான்மையோருடைய பிரதிநிதித்துவத்தைக் குறைத்து, சிறுபான்மையோருக்குக் கூடுதலான பிரதிநிதித்துவம் அளிக்கும் திட்டத்தைப் போன்றதன்று. ஆதலால், சமஷ்டி அரசியல் எல்லோரும் விரும்பவேண்டிய ஓர் இலட்சியமாகும்.

சுயாட்சித் தமிழரசை நிறுவ வேண்டுமென்று, யாம் கோருவதற்குப் பல காரணங்களுண்டு. முஸ்லிம்கள், தமிழர்களாகிய தமிழ் பேசும் மக்கள் எலலோரும் இப்பொழுதே, தாங்கள் - தாழ்ந்தவர்கள் - என்ற மனப்பான்மையைப் பெற்று வருகிறார்கள். ஒரு மனிதனின் பூரணமான மனோ விருத்திக்கு, அவன், "தானிருக்கும் நாடு தன்னுடையதே" என்றும், "நாட்டின் அரசாங்கமும் தனதே" என்றும் கருத வேண்டியது அவசியமாகும். இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்களிடையே இன்று இவ்வுணர்ச்சி இல்லாதிருக்கிறது. அவர்கள், தங்கள் பிரதேசங்களைத் தாங்களே ஆளுவதன்மூலம், அவ்வரசாங்கம் தங்களுடையதே என்று கருதுவதற்கு அவர்களுக்கு உரிமை இருக்க வேண்டும். இன்று கூட, தமிழ்ப்பகுதிகளில் வசிக்கும் தமிழ்பேசும் மக்களுக்கும்; சிங்களப் பகுதிகளில் வசிக்கும் தமிழ் பேசும் மக்களுக்குமிடையே, இவ்வுணர்ச்சியைப் பொறுத்தவரையில் ஒரு வேற்றுமை இருப்பதைக் காணலாம்.

சிங்களப்பகுதிகளில் வசிக்கும் தமிழ் பேசும் மக்கள், தங்களுடைய எதிர்காலத்தைப்பற்றி நம்பிக்கையற்றவர்களாக இருக்கின்றார்கள் ஆனால், தமிழ்ப் பிரதேசங்களில் வசிப்பவரிடையே சுதந்திர உணர்ச்சி, இன்னும் நிலவுகிறது. தமிழ்பேசும் மக்களுக்கு ஒரு சுதந்திர அரசு வேண்டும் என்ற இந்த இயக்கங்கூட, தமிழ் பேசும் பகுதிகளில் வசிக்கும் மக்களாலும், அப்பகுதிகளுடன் இன்னும் தொடர்புடையவர்களாலுமே ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. கிழக்கு மாகாணத் தமிழர்கள் இத்திட்டத்தை ஆதரிக்கும் அளவுக்கு அங்குள்ள முஸ்லிம் மக்களும் இதை வரவேற்கின்றனர்.

கிழக்கு மாகாணம் முழுவதும் தமிழ் அரசின் பகுதியாக வேண்டுமென்றால், தமிழ் பேசும் அவ்விரு சாகியத்தாரும் ஒன்றுசேர வேண்டும். ஆனால், எங்களுடைய இயக்கம் முஸ்லிம்கள் வசிக்கும் பகுதிகள் தமிழ்ப்பிரதேசத்துடன் இணைந்திருக்க வேண்டுமா? அல்லது சிங்களம் பேசும் பிரதேசத்துடன் இணைந்திருக்க வேண்டுமா? என்பதைத் தீர்மானிப்பதற்கு முஸ்லிம்களுக்கே பூரண சுதந்திரம் இருக்க வேண்டும் என்ற அடிப்படையிலேயே நடைபெற்று வருகிறது. அவர்களுக்கு என்ன வேண்டும் என்பதை அவர்களே தீர்மானிக்க வேண்டும்.

தமிழ் மாகாணங்கள் என்று அழைக்கப்படும் பகுதிகள், இந்நாட்டில் மிகவும் குறைவாக அபிவிருத்தி செய்யப்பட்ட பகுதிகளாக இருக்கின்றன. இலங்கையின் பரப்பில் முப்பது விகிதத்தையும்; மொத்த சனத்தொகையிற் பத்து விகிதத்தையும் இம் மாகாணங்கள் கொண்டிருக்கின்றன. இவை நன்றாக அபிவிருத்தி செய்யக்கூடியன. போதிய நீர்ப்பாசன வசதிகளுடன் - சமதரையுள்ள இப்பிரதேசங்கள், தமிழ் பேசும் மக்களுடைய அரசாங்கத்தினாலன்றிச் சீரிய முறையில் அபிவிருத்தி செய்யப்பட மாட்டா. சிங்கள அரசாங்கத்தினால் இப்பகுதிகள் அபிவிருத்தி செய்யப்பட்டால், அங்கு சிங்கள மக்கள் குடியேற்றப்படுவார்கள் என்பதும் எதிர்பார்க்கப்படவேண்டியதொன்றே. கல்லோயா அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், கிழக்கு மாகாணத்தில் என்ன நடை பெற்று வருகின்றதென்பதை, அங்குள்ள மக்கள் இப்பொழுதே உணர்த்தி விட்டார்கள்.

செல்வத்திற் குறைந்த எங்களுக்கு, வலிமை பொருந்திய நண்பர்களும் இல்லை. நேர்மையையும் - மன உறுதியையும் - இலட்சியத்தூய்மையையுமே நாங்கள் ஆயுதங்களாகக் கொள்ளவேண்டும். இந்திய விடுதலை-இப்படியான தார்மீக சக்திகளினாலேயே பெறப்பட்டது. எமது விடுதலை-வெளிச்சக்திகளில் மாத்திரம் தங்கியிருக்கவில்லை. யாம் வெற்றி பெறுவதற்கு அருகதையுள்ளவர்களாக வேண்டுமானால், நமது சமூகத்திலிருக்கும் குறைகளைக் களைந்து அதைத் தூய்மைபெறச் செய்யவேண்டும்.

தமிழ் மக்களிடையே தாழ்த்தப்பட்ட வகுப்பினர் இருக்கின்றனர். அவர்கள் தாங்கள் மற்றவர்களால் ஒடுக்கப்படுவதாகக் கருதுகின்றனர். யாம் ஒருவருக்கு கொடுமை செய்தால், தர்மநீதியின்படி எமக்கும் பிறரொருவர் அதையே செய்வார். தமிழ்மக்கள் அரசியல் சுதந்திரம் பெறவேண்டுமேயானால், தம் சமுதாயத்திலே உரிமையற்றவர்களாய் இருக்கும் மக்களுக்கு அவ்வுரிமைகளை வழங்க வேண்டும்.

இறுதியாக, என்னுடைய பேச்சினைப் பொறுமையுடனும், ஆதரவுடனும் கேட்டுக்கொண்டிருந்தமைக்காக, உங்களுக்கு யான் நன்றி கூறுகிறேன். உங்களுக்குள்ளே எத்தனையோ பேருடைய வீரத்தை யான் நேர்முகமாக அறிவேன். அவ்வீரமானது - என்னகத்தும் செறிந்து, எனக்கும் உற்சாகம் அளிக்கின்றது. குற்றங்களிருந்தால் மன்னித்து, எங்கள் தொண்டின் ஒரு பகுதியாக, என் முயற்சியையும் ஏற்றுக்கொள்ளும்படி, உங்கள் எல்லோரையும் பணிவுடன் வேண்டிக்கொள்கின்றேன்.

முற்றும் ...

–இளையபாரதி–

# அடங்காப்பற்றின் மாவீரன்! வணங்காமுடி பண்டாரவன்னியன்

சென்றவாரத் தொடர்ச்சி...

நல்ல மாப்பாணரின் படைகள், வெற்றிலைக் கேணியிலிருந்து புறப்பட்டு, கட்டைக்காடு ஊடாக ஆனையிறவின் பக்கப்புறமாகத் தாக்குவதற்காக, படைகள் தயார்நிலையில் இணைந்து கொண்டன. நல்லமாப்பாணர் தன் படைகளுக்கு இட்ட கட்டளை, தாக்குதல் தொடங்கி மிகக் குறைந்த நேரத்தில் அடிபணிய வைக்க வேண்டும், சூரியன் உதிக்கும் போது, கோட்டையின் உச்சியில் பனங்காமக் கொடி பறக்க வேண்டும். இல்லையென்றால் போரை நிறுத்தி, புறமுதுகிட்டுப் பின்வாங்க வேண்டும். நாம் பெற்ற வெற்றிகள் பெரிதல்ல, ஆனையிறவுக்கோட்டையைச் சிதறடிக்கும் போதே, நாம் உண்மையான வெற்றியைக் காட்டுவோம். எனவே சூரிய உதயத்துக்கு முன்பு, கோட்டையைக் கைப்பற்ற வேண்டுமெனப் பணித்து , சரியாக நட்சத்திரங்களைக் கொண்டு நேரத்தைக் கணித்து, முதலாவது தீ எறிப்பந்தை ஆகாயத்தை நோக்கிச் செலுத்தினார். பின் அரை நாளிகையில், சரமாரியாக ஆனையிறவுக் கோட்டையை நோக்கி தீ எறிபந்தையும், கல் எறிபந்தையும் செலுத்தினார்.

டச்சுக்காரப் படைகள் ஏற்கனவே பூநகரி, வெற்றிலைக்கேணி கோட்டைகளை பனங்காமப் படைகள் தகர்த்ததை அறிந்து அவற்றைப் பலப்படுத்தியே வைத்திருந்தனர். எனினும் இடையில் பனங்காமப்படைகள், நல்லமாப்பாணர் விழுப்புண் அடைந்து தம் இடம் நோக்கித் திரும்பிக்கொண்டு இருக்கின்றன என்று, தம் ஒற்றர்கள் மூலம் அறிந்துகொண்டதால், சற்றுக் கவனக்குறைவாகவே இருந்தனர். இதனைப் பயன்படுத்தி நல்லமாப்பாணர், தம் படைகளை மின்னல் வேகத்தில் தாக்குதலுக்கு வழிப்படுத்தினார். தம் பக்கத்துப் பீரங்கிகள் வெடிப்பதற்கு முன்னரேயே, அந்த இடத்தைக் கைப்பற்றி அழித்தனர். உக்கிரமான சண்டைகள் தொடங்க, கைலை வன்னியனும் தன் படையைக் களத்திலிறக்கிப் போராட்டத்தைத் தொடங்கினான்.



திடீரெனக் கைலைவன்னியன் தாக்குதலை மேற்கொள்ள டச்சுப்படைகள் திகைத்தன. இருநிலைகளுக்கான தாக்குதலுக்கு முகம்கொடுக்க முடியாது திணறின. எனினும் சமாளித்துக் கொண்டு, தாக்குதலைத் தொடர்ந்தன. கோட்டைக்குப் பொறுப்பாகவிருந்த இரண்டாம் நிலைக் கட்டளைத்தளபதி, எப்படியாவது காலைவரை சமாளித்தால் சாவகச்சேரியிலுள்ள படை விரைவாக வந்துவிடும், என எண்ணி படை உதவிக்கு ஏவலர்களை அனுப்பி, நிலமைகளுக்கேற்ப கட்டளைகளைப் பிறப்பித்துக்கொண்டிருந்தான். எனினும் குறுகிய நேரத்தில் நல்ல மாப்பாணரால், பீரங்கிகள் அழிக்கப்பட்டமையும், பயன்படுத்தாமல் போனமையும், பெரும் இழப்பாகவே டச்சுப் படைகளுக்கு இருந்தது. சுமார் 120 டச்சுப் படைகளையும், 100 சுதேசப்படைகளையும் கொண்டு, காணப்பட்ட கோட்டையில் விடிவெள்ளி உதயமாகும் வரை உக்கிர சண்டை நடைபெற்றது.

உதவி பெறச் சென்ற ஐந்து ஏவலர்களையும், இயக்கர் வாழ்ந்த பகுதியான இயக்கச்சி என அழைக்கப்படும் இடத்தில் வைத்து, நல்ல மாப்பாணரால் அனுப்பப்பட்ட பத்து குதிரைப்படை வீரர்கள் தலையைத் துண்டித்து குதிரைகளையும் கைப்பற்றினர்.

நல்ல மாப்பாணர் படையும், கைலைவன்னியன் படையும் மூர்க்கமாக நெருங்கித் தாக்கும் போது, அதற்கு ஈடு கொடுக்க முடியாது டச்சுப்படைகள், பின்னோக்கி யாழ்ப்பாணம் நோக்கி மிகவேகமாக பின்வாங்கத் தொடங்கியது.

தொடரும்...

–நாகநாதன்–



# டெல்லி மாணவி பற்றி அக்கறைப்படுவோர் மண்டைதீவு சிறுமி பற்றி அக்கறை கொள்ளாததேன் ?

டெல்லியில் மருத்துவக் கல்லூரி மாணவி, பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்ட சம்பவம், உலக அள வில் கவனத்தை ஈர்த்திருக்கிறது. இந்தச் சம்பவமும் அதனைத் தொடர்ந்து நடாத்தப்படும் ஆர்ப்பாட்டங்களும், சர்வதேச ஊடகங்களில் முதன்மை செய்தியாகியிருக்கின்றன. ஐ.நா. செயலாளர் நாயகம் கண்டனம் தெரிவிக்கும் அளவிற்கு, இந்த சம்பவம் மூலைமுடுக்கெல்லாம் எதிரொலித்திருக்கிறது.

டெல்லி மாணவி பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு, படுகொலை செய்யப்பட்டதை அறிந்து, கொழும்பில் உள்ள மேட்டுக்குட்டி பெண்ணிலைவாதிகளும், ஐக்கிய தேசியக்கட்சி மகளிர் அமைப்பினரும் கையெழுத்து வேட்டை நடத்தி, ஊர்வமாகச் சென்று இந்திய தூதுவரிடம் மனுவும் கொடுத்திருக்கிறார்கள்.

இலங்கையில் உள்ள பெண்ணிலைவாதிகளும் கண்டன அறிக்கை களை வெளியிட்டிருக்கிறார்கள். அதற்கு மேலாக ஈழத்தமிழர்களின் விடுதலைக்காகப் போராடுவதாகக் கூறும், நாடு கடந்த தமிழீழ அரசாங்கமும் டெல்லி மாணவியின் படுகொலையைக் கண்டித்து, அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள்.

இந்த மேட்டுக்குட்டி பெண்ணிலைவாதிகளுக்கு, தங்கள் நாட்டில் தினம் தினம் நடக்கும் பாலியல் பலாத்காரங்களும் படுகொலைகளும், ஏன் கண்ணுக்குத் தெரியவில்லை. ஈழத்தமிழர்களுக்காகப் போராடுவதாகக் கூறும் நாடுகடந்த தமி ழீழ அரசாங்கத்திற்கு, மண்டைதீவில் 4 வயதுச் சிறுமி பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு படுகொலை செய்யுப்பட்ட சம்பவம் காதில் விழவில்லை. ஆனால் டெல்லி மாணவி கொலை செய்யப்பட்ட சம்பவம் மட்டும், அவர்களை பாதித்திருக்கிறது. நாடு கடந்த அரசாங்கத்தில் உள்ள பெண்களும் மேட்டுக்குடியைசேர்ந்தவர்கள்என்பதால், டெல்லிப் பெண்ணின் படுகொலை மட்டும் அவர்கள் காதில் கேட்டிருக்கிறது.

ஆனால் மண்டைதீவிலும், திருக்கோவிலிலும் பாதிக்கப்பட்டிருப்பது ஏழைத்தமிழ் பெண்கள் என்பதால், அவர்களின் அவலக்குரல் நாடு கடந்த தமிழீழ அரசாங்க அம்மணிகளின் காதில் விழவில்லை போலும். ஐ.தே.க வினரை பொறுத்தவரை, தென்னிலங்கையை விட போரினால் பாதிக்கப்பட்டு நொந்து ஒடிந்து போய் இருக்கும், வடக்கு கிழக்கில் உள்ள தமிழ்ப் பெண்கள் மீதும், சிறுமிகள் மீதும், இந்தக் கொடுமைகள் நடப்பதால், இவர்களின் கண்களுக்கு இது தெரியவில்லையா, அல்லது அவர்கள் தமிழர்கள் என்ற காரணத்தினால் தெரியவில்லையா என்பது புரியவில்லை.

கொழும்பிலிருந்து வெளிவரும் ஊடகங்களும், ''டெல்லி மாணவி பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு படு-கொலை செய்யப்பட்டார்'' என, ஓயாமல் ஓலமிட்டன. ஆனால் மண்டைதீவில் 4 வயதுச் சிறுமி இதே காலப்பகுதியில், பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்டார் என்ற செய்தியை, ஏன் அறியவில்லை.

அல்லது திருக் கோவிலில் மூன்று தமிழ்ப் பெண்கள் காடையர்களால், பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு, கடுமையான முறையில் தாக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டிருக்கிறார்கள் என்ற செய்தியை, அறியவில்லையா? தமிழர் என்ற ஒரே காரணத்திற்காகவே, இவை மூடிமறைக்கப்படுகின்றன. குற்றவாளிகள் சுதந்திரமாக நாடமாட அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

2012 ஆம் ஆண்டு இரு சிறுமிகள் உட்பட, அண்மைய ஆண்டுகளில் 10 ற்கும் மேற்பட்ட பெண்கள், பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பது பற்றியும், இவர்களில் நான்கு சிறுமிகள் கொல்லப்பட்டிருக்கிறார்கள் என்பது பற்றியும், யாரும் கவனம் எடுத்ததாகத் தெரியவில்லை. ''ஐயோ டெல்லியில் உள்ள மாணவி பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டுவிட்டார்'' என கொழும்பில் உள்ள மேட்டுக்குடிப் பெண்கள், காவடி எடுத்துத் திரிந்த அதே காலப்பகுதியில் தான், மண்டைதீவில் நான்கு வயதுச் சிறுமி பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு, படுகொலை செய்யப்பட்டு, கிணற்றில் போடப்பட்டார். திருக்கோவிலில் வயலில் களை பிடுங்கிக்கொண்டிருந்த, மூன்று தமிழ் பெண்கள் மீது, காடையர்கள் பாலியல் பலாத்காரம் செய்து அவர்களைத் தாக்கி காயப்படுத்தி இருக்கிறார்கள்.

அருகில் இருக்கும் தமிழ் பெண்களின் அவலக்குரல்களை கேட்காத, கொழும்பு மேட்டுக்குடி பெண்ணிலைவாதிகளுக்கு, டெல்லியில் உள்ள பெண்ணின் அவலக்குரல் கேட்டிருக்கிறது. இதுதான் எமக்கு புரியாத புதிராக இருக்கிறது. மண்டைதீவில் குணராசா சுடரினி என்ற சிறுமி, அண்மையில் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு, படுகொலை



செய்யப்பட்டு பாழடைந்த கிணறு ஒன்றில் போடப்பட்டிருக்கிறார். அச்சிறுமி பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டிருக்கிறார் என்பதை, பிரேத பரிசோதனையை நடத்திய சட்டவைத்திய அதிகாரி, சிவரூபன் உறுதிப்படுத்தியிருக்கிறார்.

சிறுமியை காணவில்லை என்ற உடன், அன்று மாலையே அயலவர்களும் உறவினர்களும், அக்கிணறு உட்பட பல இடங்களிலும் தேடிய போதிலும், அச்சிறுமியின் சடலம் கண்டுபிடிக்கப்படவில்லை. மறுநாளும் அப்பகுதியில் தேடிய போதே, செருப்பு ஒன்று கிணற்றில் மிதந்து கொண்டிருந்ததைக் கண்டவர்கள், கிணற்றினுள்ளே தேடிய போது அச்சிறுமியின் சடலம் மீட்கப்பட்டிருக்கிறது. அச்சிறுமி கடத்தி செல்லப்பட்டு, பாலியல் பலாத்காரம் செய்யப்பட்ட பின்னர், அன்று இரவுதான் அக்கிணற்றில் வீசப்பட்டிருக்கிறார் என்பது தெரியவந்திருக்கிறது. சடலம் கிணற்றில் போடப்பட்டதால், யார் பாலியல் பலாத்காரம் புரிந்தார் என்பதை, டி.என்.ஏ பரிசோதனையில் கண்டுபிடிக்க முடியாமல் போகலாம் என்றும், வைத்திய அதிகாரி சிவரூபன் மேலும் கூறியிருக்கிறார்.

இச்சம்பவம் தொடர்பாக, ஆயுதக்குழு ஒன்றை சேர்ந்த ஒருவர், கடந்த 31 ஆம் திகதி கைது செய்யப்பட்ட போதிலும், அரசியல் செல்வாக்கு காரணமாக அவர் விடுவிக்கப்பட்டுள்ளார் என்றும் அப்பகுதி மக்கள் கூறுகின்றனர். ஆனால் தாங்கள் யாரையும் கைது செய்யவில்லை என, காவல்துறையினர் கூறுகின்றனர்.

இது போன்றே, குடாநாடு, தீவுப்பகுதிகள் உட்பட வடக்குக், கிழக்குப் பகுதிகளில் பாலியல் பலாத்கார சம்பவங்கள் தொடர்பில், சிலர் கைது செய்யப்பட்ட சம்பவங்களும் உண்டு. எது எப்படி இருந்த போதிலும், கடந்த காலங்களில் தீவுப்பகுதி உட்பட யாழ். குடாநாட்டிலும், ஏன் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் தமிழ்ப் பெண்கள் மீது நடத்தப்பட்ட, பாலியல் பலாத்காரங்கள், படுகொலைகளின், குற்றவாளிகள் சுதந்திரமாக நடமாட அனுமதிக்கப்பட்டிருப்பது போலவே, மண்டைதீவில் 4 வயது சிறுமி பாலி யல் பலாத்காரம் செய்யப்பட்டு, படுகொலை செய்யப்பட்ட சம்பவமும் மறைக்கப்பட்டுவிடும். .

கடந்த 2012 ஆம் ஆண்டில் யாழ். தீவுப்பகுதியில், இரு சிறுமிகள் பாலியில் பலாத்காரம் செய்யப்பட்டு கோரமாக கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். இது தவிர கடந்த ஆண்டு காரை நகரில் பழைய இரும்பு வியாபாரியான முஸ்லீம் நபர் ஒருவர், ஊனமுற்ற இளம்பெண் ஒருவரை பாலியல் பலாத்காரம் செய்திருந்திருந்தார். நெடுந்தீவில் கடந்த 3.3.2012 அன்று நடந்த லக்சனா என்ற சிறுமியின் படுகொலை தொடர்பாக, கைது செய்யப்பட்ட நபரும் தண்டனையிலிருந்து தப்பிக்கும் வாய்ப்பே காணப்படுகிறது. இந்த மரணம் தொடர்பாக நடத்தப்பட்ட மரபணு சோதனை முடிவு அரசியல் செல்வாக்கு காரணமாக மாற்றப்பட்டுள்ளதாகவும் கூறுப்படுகிறது.

இதேபோன்று கடந்த முதலாம் திகதி திருக்கோவில் வட்டமடு பகுதி, வயலில் களை பிடுங்கிக்கொண்டிருந்த மூன்று தமிழ் பெண்கள் மீது, காடையர் குழு ஒன்று பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியதுடன் அவர்களைத் தாக்கி காயப்படுத்தியும் உள்ளனர்.

இந்த மூன்று பெண்களும் அக்கரைப்பற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அந்த பெண்கள் மூவரும் அபாய குரல் எழுப்பியதைக் கேட்ட அப்பகுதி பிரதேச மக்கள், அங்கு வந்த போது பாலியல் பலாத்காரத்தில் ஈடுபட்ட காடையர் குழு தப்பிச் சென்றுள்ளது.

ஆலையடிவேம்பு மகாசக்திக் கிராமத்தைச் சேரந்த கூலித் தொழிலா-ளிகளான இந்த மூன்று பெண்களும், வயலில் களை பிடுங்கி கொண்டிருந்த போது, அங்கு வந்த 4 பேரை கொண்ட குழு அப்பெண்களை இழுத்து சென்று பாலியல் பலாத்காரம் புரிந்துள்ளனர். அப்பெண்கள் அபயக்குரல் எழுப்பி, தப்பி செல்ல முற்பட்ட போது தாக்குதல் நடத்தி உள்ளனர்.

கொழும்பில் ஐக்கிய தேசியக்கட்சி மகளிர் அமைப்பினர், டெல்லி மாணவிக்காக நடத்திய கையெழுத்து போராட்டம் மற்றும் ஆர்ப்பாட்டம் தொடர்பாக, மனோ கணேசன் தலைமையிலான ஜனநாயக மக்கள் முன்னணியினர் ஒரு அறிக்கையை வெளியிட்டிருந்தனர். அந்த அறிக்கையின் ஒரு பகுதியை இங்கு சுட்டிக்காட்டுவது பொருத்தமாக இருக்கும். புதுடில்லி பெண்ணுக்கு ஏற்பட்ட துன்பம் தொடர்பாக நாம் அக்கறை கொண்டுள்ளோம்.

ஆனால் புதுடெல்லி பெண் தொடர்பில் இந்திய தூதுவரிடம், மனு கையளிக்கும் தகைமை நமது நாட்டில் நிலவுவதாக நாம் நம்பவில்லை. இந்த நாட்டில் இன்று தமிழ் பெண்களுக்கு ஏற்பட்டுள்ள துன்பம், புதுடெல்லிப் பெண்களின் நிலைமையைவிட பல மடங்கு பாரதூரமானதாகும். குறிப்பாக வன்னியிலே நிர்க்கதியாயள்ள தமிழ் பெண்கள் பெரும் உடல், உள துன்பங்களை சந்திக்கின்றனர். நடந்து முடிந்த போரின் போதும், போர் முடிந்து அகதிமுகாம்களில் அடைப்பட்டிருந்தபோதும் நமது பெண்கள் மிகப்பெரும் அவலங்களை சந்தித்தனர். இந்த அவலங்கள் இன்றும் தொடர்கின்றன.

எனவே நமது பெண்கள் அவல நிலையில் வாழும் பொழுது, அதை அறியாதது போல் புதுடெல்லி பெண் தொடர்பாக நாம் செயற்பட முடியாது. நம் நாட்டு தமிழ் பெண்கள் அவல நிலையை ஐ.தே.க பெண்கள் சங்கத்தினர் கவனத்தில் கொள்ள வேண்டும் என, ஜனநாயக மக்கள் முன்னணியினர் தெரிவித்திருந்தனர்.

தென்னிலங்கையில் உள்ளவர்களுக்கும், வெளிநாட்டு பணத்தில் பெண்ணிலைவாதம் பேசித்திரிபவர்களுக்கும், டெல்லியில் நடந்த பாலியல் பலாத்காரம் அதிர்ச்சியாக இருக்கலாம். ஆனால் இலங்கையின் வடக்கு கிழக்கில் உள்ள தமிழ் மக்கள், இந்தக் கொடுமைகளை தினம் தினம் அனுபவித்து வருகிறார்கள்.

கிழக்கிலே திருக்கோவில் சம்பவம் போல், வடக்கிலே மண்டைதீவு சம்பவம் போல, தினம் தினம் வடக்கு கிழக்கில் உள்ள தமிழ் பெண்கள் பாலியல் கொடுமைகளுக்கு ஆளாகிகொண்டிருக்கிறார்கள்.

திருக்கோவிலில் தமிழ் பெண்கள், பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டது பற்றி, இன ஐக்கியம் பேசும் எந்த ஒரு அமைப்புக்களோ, அல்லது பெண்கள் அமைப்புக்களோ வாயே திறக்கவில்லை.

அதேபோன்று காரைநகரில் தமிழ் பெண் ஒருவர் முஸ்லீம் இரும்பு வியாபாரியால் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டபோது, முஸ்லீம் அரசியல்வாதிகள் குற்றவாளியை காப்பாற்ற முற்பட்டனரே தவிர அக்குற்றத்திற்கு எதிராக குரல் கொடுக்கவில்லை.

சமஉரிமை கேட்டு போராடிவரும் பெண்ணிலைவாதிகளுக்கும், திருக்கோவில் சம்பவமோ மண்டைதீவு சம்பவமோ காதில் கேட்காது. டெல்லி சம்பவம் மட்டுமே காதில் கேட்கும். ஏனெனில் இங்கே பாதிக்கப்படுவது அப்பாவி நாதியற்ற தமிழ் பெண்கள் அல்லவா...

**–சுவிஸிலிருந்து இரா. துரைரத்தினம்–**

# பிராந்தியச்  செய்திகள்

## அமைச்சரவையில் மாற்றம், மூன்று பிரதிஅமைச்சர்களுக்கு ஒரே துறை

சிறிலங்கா அமைச்சரவையில் 10அமைச்சர்கள், 2 திட்ட அமைச்சர்கள், 6பிரதி அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்கு மூன்று பிரதி அமைச்சர்களும், துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சுக்கு இரண்டு பிரதி அமைச்சர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் ஜனாதிபதி முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டனர்.

**புதிதாக பொறுப்பேற்றுள்ள அமைச்சர்கள் :-**

அனுர பிரியதர்சன யாப்பா - பெற்றோலிய வளங்கள், சுசில் பிறேம்ஜெயந்த் - சுற்றாடல், மீள் புதுப்பிக்கத்தக்க வளங்கள், பவித்ரா வன்னியாராச்சி - மின் சக்தி, சம்பிக்க ரணவக்க - தொழிநுட்ப, ஆராய்ச்சி மற்றும் அணுசக்தி, லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன - முதலீட்டு ஊக்கவிப்பு, விஜித் விஜிதமுனி சொய்சா, வனவிலங்கு, வனவளம் - பசீர் சேகுதாவூத், உற்பத்தி, உற்பத்தி திறன் - துமிந்த திசாநாயக்க. கல்விச்சேவைகள், ஜெயரட்ண ஹேரத் . தாவரவியல், பொது பொழுதுபோக்கு, லக்ஸ்மன் செனவிரத்ன - சீனிக் கைத்தொழில்.

**திட்ட அமைச்சர்கள்:-**

நிர்மல கொத்தலாவ- துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள், றோகித அபேகுணவர்த்தன- துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள்

**பிரதி அமைச்சர்கள்:-**

எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா - பொருளாதார அபிவிருத்தி, எஸ்.எம். சந்திரசேன - பொருளாதார அபிவிருத்தி, சுசந்த புஞ்சிநிலமே - பொருளாதார அபிவித்தி, பைசர் முஸ்தபா - முதலீட்டு ஊக்குவிப்பு, அப்துல் காதர் - சுற்றாடல் மற்றும் மீள் புதுப்பிக்கத்தக்க வளங்கள், சரத் குமார குணரத்ன - கடற்றொழில் நீரியல் வளங்கள்.

## சிறிலங்காவுக்கு பாதிப்பை ஏற்படுத்திய சனல் - 04

சர்வதேச ரீதியில் சிறிலங்காவின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் நோக்கில், விடுதலைப்புலிகள் முன்னெடுக்கும் திட்டங்கள் இன்னமும் முடிவடையவில்லை என, வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார். நாட்டில் மாற்றங்கள் நிகழும் போது, விடுதலைப்புலிகள் ஆதரவாளர்களால் குழப்பங்கள் விளைவிக்கப்படுகின்றன.

சிறிலங்காவுக்கு பாதிப்பை ஏற்படுத்த ஏவிடுதலைப்புலிகள் முன்னெடுக்கும் திட்டங்கள், இன்னமும் முடிவடையவில்லை என வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார். நாட்டில் மாற்றங்கள் நிகழும் போது, விடுதலைப்புலிகள் ஆதரவாளர்களால் குழப்பங்கள் விளைவிக்கப்படுகின்றன.

சிறிலங்காவுக்கு ஜீ.எஸ்.பி.பிளஸ் வரிச் சலுகையை வழங்குவது பற்றி, ஐரோப்பிய ஒன்றியம் தீர்மானிக்கவிருந்த இச்சந்தர்ப்பத்தில், சனல் - 04 தொலைக்காட்சியில் வெளியிடப்பட்ட காணொளி, பெரும் பாதிப்பை ஏற்படுத்தியதாக அவர் தெரிவித்துள்ளார். தமிழீழத்தை அமைப்பது என்ற, அடிப்படைக் கோட்பாட்டில் இருந்து விடுதலைப்புலிகள், இன்னமும் விலகவில்லை. இந்த இலக்கை அடைவதற்கான பொறிமுறைகள், மாத்திரமே மாரியுள்ளதாக அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் மேலும் தெரிவித்தார்.

## சிறிலங்காவுக்கு எதிராக அமெரிக்கா வெட்டும் புதைகுழி

சிறிலங்கா தொடர்பில், இராஜதந்திர முன்னேற்பாடுகளை அமெரிக்கா முடுக்கிவிட்டிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. ஜெனிவாவில் எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள, ஐ.நா. மனித உரிமைகள் சபைக் கூட்டத்தொடரில் ,சிறிலங்காவுக்கு அமெரிக்கா உத்தேசித்துள்ளது.

இதற்கான இராஜதந்திர முன்னேற்பாடுகளை அமெரிக்கா இப்போதே முடுக்கிவிடப்பட்டிருப்பதாக அறியமுடிகின்றது. இதன்படி மார்ச் மாத கூட்டத்தொடரில் பங்கேற்கும் நாடுகளின் தூதுவர்களுக்கு, இந்த விடயம் குறித்து தெளிவுபடுத்தும் நடவடிக்கைகளை, அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சு, ஏற்கனவே ஆரம்பித்திருப்பதாகக் கூறப்படுகிறது. சிறிலங்கா தொடர்பில் அமெரிக்கா கூடுதல் கவனம் செலுத்திவருவதாகவும், மார்ச் மாத மாநாட்டில் அது தொடர்பில் பிரேரணையொன்று கொண்டுவரப்படும் சாத்தியம் தொடர்பிலும் ஜெனிவாவிலுள்ள அமெரிக்கத் தூதரகம், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு இராஜதந்திர மட்டத்தில், முன்னறிவித்தலை கொடுத்திருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சிறிலங்கா தொடர்பில் இந்த முறை ஜெனிவா மாநாட்டில் மூன்று நாற்கள் தனித்தனி அமர்வுகள் இடம்பெறவுள்ளன. சிறிலங்காவுக்கு எதிராக சமர்பிக்கப்படவுள்ள அமெரிக்காவின் தீர்மானம் இறுதிக்கட்டத்தை அடைந்துள்ளதாக, அமெரிக்க இராஜதந்திர உயர்மட்ட வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

## விஷேட கல்வி வள நிலைமைச் செயற்பாடு இராமகிருஷ்ண மகா வித்தியாலயம் - திருக்கோயில்



அம்பாறை மாவட்டத்தின் ஆலையடிவேம்பு, பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கிராமங்களில் தமது உடல், உள, சமூக விருத்திக் குறைபாடுகளின் காரணமாக, கல்வி மறுக்கப்பட்ட விசேட தேவையுடைய பிள்ளைகளை, சாதாரண பாடசாலையில் ஒன்றிணைத்து, அவர்களிடமுள்ள மாற்றாற்றல்களை வெளிக்கொணரவும், அவர்தம் திறன்களுக்கேற்ப பொருத்தமான கற்பித்தல் முறையில் கல்வியூட்டவும், சமூக ஒன்றிணைப்பினை ஏற்படுத்துமுகமாகவும், ஒவ்வொரு கல்வி வலயத்தின் கீழுள்ள கோட்டக் கல்வி அலுவலகம், ஒன்றுக்கு, குறைந்தது ஒரு விசேட கல்வி வள நிலையம், அமைக்கப்படவேண்டும் என்ற அடிப்படையில், 2007ஆம் ஆண்டு இறுதியில் ஆலையடிவேம்புக் கல்விக் கோட்டத்தில், விசேட கல்வி வள நிலையம் ஆரம்பிப்பதற்கான பாடசாலையாக, கல்வி அதிகாரிகளால் திகோ/இராமகிருஷ்ண மிசன் மகா வித்தியாலயம் தெரிவுசெய்யப்பட்டது.

2008 ஆம் ஆண்டு தை மாதம், முதல் இரு வாரங்களில், ஆலையடிவேம்பு சுகாதார வைத்திய பணிமனை அதிகாரிகளின் உதவியுடன், இரு உளவள தொண்டர்கள் ஆசிரியர்களாக செல்வி.பா.தீபரேகா, செல்வி.த.சத்தியதயாழினி ஆகியோர் நியமிக்கப்பட்டனர். இவ்வாசிரியர்கள் மூலம் ஆலையடிவேம்புப் பிரதேசத்திலுள்ள விசேட தேவையுடைய பிள்ளைகள் இனங்காணப்பட்டனர்.

இதனைத் தொடர்ந்து இப்பிள்ளைகளின் பெற்றோருக்கு விசேட கல்வி வள நிலையம் தொடர்பாகவும், பிள்ளையின் எதிர்காலம் தொடர்பாகவும் விழிப்புணர்வூட்டப்பட்டது. இதன் பயனாக 2008.01.17ஆம் திகதி எமது வித்தியாலயத்தில் வைபவரீதியாக, நான்கு விசேட தேவையுடைய மாணவர்களுடன் விசேட கல்விவள நிலையம், பாடசாலை அதிபர் திரு.சு.லோகிதராஜா அவர்கள் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது.

இங்கு விசேட தேவையுள்ள மாணவர்களின் பல்வேறு ஆற்றல்களையும் வெளிக்கொணருமுகமான விசேட பயிற்சிகளும், அவர்களுக்கான உளவியல் ரீதியான அரவணைப்புத் தொடர்பான நடைமுறைகளையும் இப்பயிற்ச்சி வழிகாட்டுதலின் போது மேற்கொள்ளப்படுகின்றமை இங்கு விசேடத் தன்மையாகும். அத்துடன், இம்மாணவர்கள் வியையாட்டுப் போட்டிகள், கலை நிகழ்வுகள் போன்ற இணைப் பாட விதானச் செயற்பாடுகளில் பங்குபற்றி மாகாண மட்டம் வரைசென்று வெற்றி பெற்று சாதனை படைத்துள்ளார்கள்

## தடுத்து வைக்கப்பட்டிருந்த யாழ். பல்கலை மாணவர்கள் இருவர் விடுதலை.



தடுத்து வைக்கப்பட்டிருந்த யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் நால்வரில் இருவர் விடுதலை புலனாய்வாளர்களால் கைது செய்யப்பட்டு, வெலிகந்த பலனாய்வு நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் நால்வரில் இருவர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இன்று விடுதலை செய்யப்பட்ட மாணவர்கள் இருவரும் அவர்களின் பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாக புனர்வாழ்வு ஆணையாளர் பிரிகேடியர் தர்ஷன் ஹெட்டியாரச்சி தெரிவித்துள்ளார். யாழ் பல்கலைக்கழக மாணவ ஒன்றியத்தின் தலைவர் பாவானந்தன் மற்றும் விஞ்ஞான பீடத்தின் மூன்றாம் ஆண்டு மாணவரான சொலமன் ஆகிய இருவருமே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

தடுத்து வைக்கப்பட்ட இம் மாணவர்கள் ஒன்றரை மாதங்களாக அங்கு புனர்வாழ்வளிக்கப்பட்ட நிலையிலே இன்று விடுவிக்கப்பட்டனர் என புனர்வாழ்வு ஆணையாளர் குறிப்பிட்டார். குறித்த மாணவர்களின் பெற்றோர்களும், யாழ்.பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ பீடத்தின் பீடாதிபதி வேல்நம்பி அவர்களும் விடுதலை செய்யப்பட்ட மாணவர்களை அழைத்து வருவதற்காக வெலிகந்தைக்குச் சென்றள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வருடம் நவம்பர் மாதம் யாழ். பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ பீடத்தின் வேல்நம்பி அவர்களும் விடுதலை செய்யப்பட்ட மாணவர்களை அழைத்து வருவதற்காக வெலிகந்தைக்குச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. கடந்த வருடம் நவம்பர் மாதம் யாழ். பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற மாவீரர் தின நிகழ்வுகள், ஆர்ப்பாட்டங்களையடுத்து, குற்றப் புலனாய்வு பிரிவினரால் பல்கலைக்கழக இம்மாணவர்கள் நான்கு பேர் கைது செய்யப்பட்டனர்.

அதன் பின்னர் புனர்வாழ்வுக்காக வெலிகந்த புனர்வாழ்வு நிலையத்துக்கு மாற்றப்பட்டிருந்தனர்.

## தமிழர்களுக்கு நீதியானதொரு தீர்வுத் திட்டம் வழங்கப்பட வேண்டும் - இந்தியா கோரிக்கை

சுய கௌரவத்துடன் கூடிய நீதின ஓர் தீர்வுத் திட்டமொன்று தமிழ் மக்களுக்கு வழங்கப்பட வேண்டும் என, இந்திய அரசு இலங்கை அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது. தமிழ் மக்களின் சம உரிமைகளை உறுதி செய்ய, அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வெளிவிவகார அமைச்சர் சல்மன் குர்ஷிட் தெரிவித்துள்ளார்.

அத்துடன், தமிழ் மக்களின் எதிர்காலம் குறித்து, அந்தச் சமூகத்தினருடன் தொடர்ச்சியாக பேச்சுவார்த்தை நடத்த வேண்டும். யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்த மக்களுக்கு தொடர்ச்சியாக உதவிகள் வழங்கப்படும். தமிழ் மக்களுக்ககு சுய கௌரவத்துடன் கூடிய, நீதியான ஓர் தீர்வுத்திட்டமொன்று வழங்கப்படவேண்டுமென அவர் விலியுறுத்தியுள்ளார். 13ம் திருத்தச் சட்டத்தின் அடிப்படையில், தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்தக் கூடிய ஓர் அடித்தளமொன்று உருவாக்கப்படும் என, கருதுவதாக அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். தற்போது இந்தியாவிற்கு விஜயம் செய்துள்ள இலங்கை வெளிவிவகார அமைச்சர் சல்மன் குர்ஷிட்ஜச் சந்தித்தபோதே அவர் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

**வாசகர்களுக்கு...**

எமது தினப்புயலின் கடந்த 27.01.2013 மற்றும் 03.02.2013 ஆகிய தினங்களில், வெளிவர வேண்டிய இதழ்கள் தவிர்க்க முடியாத காரணங்களால் வெளிவரவில்லை என்பதை வாசகர்களுக்கு அறியத்தருகின்றோம்.



# சினிமா உலகம்



## வழக்கு எண் 18/9 க்கு பிரான்ஸில் விருது.



பாலாஜி சக்திவேல் இயக்கிய படம் 'வழக்கு எண் 18/9 ஆகும். இயக்குனர் லிங்குசாமியின் 'திருப்பதி பிரதர்ஸ்' நிறுவனம் தயாரித்த இந்தப் படம், தமிழ் நாட்டில் நல்ல வரவேற்பைப் பெற்றது. 2012ஆம் ஆண்டுக்கான தேசிய விருதுகளைக் குவிக்கும் என்று எதிர்பார்க்கப்படும் படம்.

தமிழ் நாட்டின் பல்வேறு அமைப்புகள் இதனைச் சிறந்த படமாகத் தேர்வு செய்து, விருதுகள் வழங்கியிருந்தாலும், கடல்தாண்டி முதல் விருதைத் தட்டி வந்துள்ளது இப்படம்.

பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் நடந்துவரும், தெற்காசிய சர்வதேச திரைப்பட விழாவில், இப்படம் திரையிடப்பட்டது. ஆங்கில உபதலைப்புடன் திரையிடப்பட்ட இப்படத்தை, உலகம் முழுவதிலிருந்து வந்திருந்த இயக்குனர்கள், நடிகர், நடிகைகள் பார்த்தனர். படம் முடிந்ததும், 5நிமிடம் எழுந்து நின்று கைதட்டினார்கள்.

கடந்த 20ஆம் திகதி நடந்த நிறைவுவிழாவில், 'வழக்கு எண் 18/9 ஐச் சிறந்த படமாக அறிவித்தனர். அதற்கான விருதை இயக்குனர் பாலாஜி சக்திவேலிடம் வழங்கினர்.

இதுகுறித்து தயாரிப்பாளர் லிங்குசாமி விடுத்துள்ள செய்தியில், ''திருப்பதி பிரதர்ஸ் நிறுவனத்தின் தொப்பியில் இன்னுமொரு இறகு செருகப்பட்டுள்ளது. இது நல்ல படங்களை எடுக்க ஊக்கத்தையும், நம்பிக்கையையும் தருகிறது என்று குறிப்பிட்டுள்ளார். நாமும் நமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

## ஸ்ருதியை வைத்துப் படம் இயக்க ஆசை! நடிகர் விஷால்




'சமர்' படத்துக்கு கிடைத்த வரவேற்பால், உற்சாகமாக இருக்கிறார், விஷால். கோலிவுட்டுக்கு ஒரு 'ஹிட்' படத்தைக் கொடுத்திருக்கும் மகிழ்ச்சி, அவரின் முகத்திலே தெரிகிறது. அதிரடி வேஷங்களில் வெளுத்துக் கட்டும் விஷாலின் மனதுக்குள், இயக்குனர் ஆசை ஒளிந்திருக்கிறது. இது குறித்து அவர் கூறுகையில், ''ஒரு படம் இயக்க வேண்டும் என்ற ஆசை, நீண்ட நாட்களாகவே உள்ளது. அதற்குக் கொஞ்சம், நேரம் பிடிக்கும்.

கதை தயாராக உள்ளது. ஷ்ருதிஹாசனை வைத்துப் படம் இயக்குவதற்காக, கதையை தயார் செய்து வைத்திருக்கிறேன். அது நடக்கலாம், நடக்காமலும் போகலாம். ஒவ்வொரு உதவி இயக்குனரும், கதை ரெடி பண்ணும் போதே, இதில் எந்த நடிகர் நடித்தால், நன்றாக இருக்கும் என்பதை, மனதில் வைத்து ரெடி பண்ணுவது வழக்கம். அது போலதத்தான், நானும் இந்தக் கதையை தயார் செய்து வைத்திருக்கிறேன்'' என்றார்.

''அப்புறம் ஒரு போனஸ் செய்தி இருக்கிறது. ஆர்யா, ஜீவாவுடன், நானும் சேர்ந்து ஒரு படத்தில் நடிக்கப் போகிறோம். வெங்கட் பிரபுதான், இந்தப் படத்தின் இயக்குனர். ஆனால், இந்தப்படம் எப்போது தயாராகும் என்பதை, இன்னும் முடிவு செய்யவில்லை. வெங்கட் பிரபுதான், இதை முடிவு செய்ய வேண்டும் என்றார், விஷால்.

## விருது வேண்டாம்: ரசிகர்களின் பாராட்டே போதும்! நடிகர் அஜித்



''இரசிகர்களின் பாராட்டு ஒன்றே போதும், எனக்கு விருது எல்லாம் தேவையில்லை'' என்று நடிகர் அஜித் கூறியுள்ளார். விஷ்ணுவர்தன் இயக்கும் புதிய படத்தில் நடித்து வரு கிறார் அஜித்.

இப்படத்தில் அஜித்துடன் ஆர்யா, நயன்தாரா, டாப்சி ஆகியோரும் நடித்து வருகின்றனர். படப்பிடிப்பு முடியும் நிலையில் உள்ளது. ஆனால் இப்படத்திற்கு பெயர் இன்னும் அதிகாரபூர்வமாக அறிவிக்கவில்லை. அதேசமயம் படத்திற்குப் பெயர் முடிவாகிவிட்டதாகவும், விரைவில் படத்தின் அதிகாரபூர்வ தலைப்பை அறிவிப்பேன் என, தயாரிப்பாளர் விஷ்ணுவர்தன் கூறியுள்ளார். இந்நிலையில் அஜித் புதுமுடிவு ஒன்றை எடுத்துள்ளார். அதாவது 8மாதத்திற்குள் ஒரு புதிய படத்தைக் கொடுக்க எண்ணியுள்ளார்.

இதுகுறித்து அவர் கூறியுள்ளதாவது, 8மாதத்திற்குள் ஒரு படத்தை முடிக்க எண்ணியுள்ளேன். அதற்காகத் திட்டமிட்டு உழைத்துவருகிறேன். இந்தக் கொள்கையை மங்காத்தா படம் முதலே எடுத்துவிட்டேன்.

மேலும் எனக்கு விருது மேலெல்லாம் ஆசை கிடையாது. மாறாக ரசிகர்களின் பாராட்டு ஒன்று மட்டும் எனக்குப் போதுமானது என்று கூறியுள்ளார்.

## சொந்த விஷயங்களை வெளிச்சம் போட விரும்பவில்லை - நடிகை சமந்தா



சினிமா என்கிற கனவுத் தொழிற்சாலைக்குள் வந்துவிட்டாலே, அவர்களைப் பற்றிய கலர், கலரான கிசுகிசுக்கள் பரவுவதும் தொடர்கதையாகிவிட்டது. அந்தவகையில், நடிகை சமந்தாவைப் பற்றி ஆந்திரப்பட உலகில், தினம் தினம் புது வதந்திகள் பரவிக்கொண்டேயிருக்கின்றன.

ஆரம்பத்தில் இதுவே தனக்கு பப்ளிசிட்டி என்று நினைத்து கண்டும், காணமலும் இருந்தார் சமந்தா. ஆனால் இப்போது ஊரறிந்த நடிகையாகி விட்டதால், அதுபோன்ற செய்திகள் பரவினால் அது தனது இமேஜைக் களங்கப்படுத்திவிடுமோ என்று அஞ்சத் தொடங்கியிருக்கிறார்.

இந்த நிலையில், தற்போது ஆந்திராவில் சித்தார்த் - சமந்தா காதல் என்று பரவியிருக்கும் புதிய செய்தியால், தலை சுற்றிப்போயிருக்கிறார் சமந்தா. உடலில் எதிர்ப்புச் சக்தி குறைந்ததால், அதற்குச் சில மாதங்களாக சிகிச்சை எடுத்து வந்தபோது, தோல் வியாதி என்று ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

ஆனால் அந்தச் செய்தி அடங்கிய சில நாட்களிலேயே, இப்போது சித்தார்த்தைக் காதலிப்பதாக பரவியிருக்கும் செய்தி, என்னை ரொம்பவுமே வேதனைப்படுத்துகிறது. இதனால் நான் நடித்துவரும் படங்களில் என்னால் முழுக்கவனம் செலுத்த முடியவில்லை என்று புகைந்து கொண்டு திரிகிறார்.மேலும், காதலிப்பது, கல்யாணம் செய்து கொள்வதெல்லாம் எனது சொந் விஷயம். என காட்டமாகப் பேசியிருக்கிறார் சமந்தா.

## நடிகர் தனுஷின் ரகசியமான படம்



தனுஷ் தற்போது ''மரியான்'' என்ற படத்திலும், ''ரங்சனா'' என்ற இந்திப்படத்திலும் நடித்து வருகிறார். இந்தப் படங்களுக்குப் பின், புதிய படம் ஒன்றில் நடிப்பதற்கும், ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ள அவர், அந்தப் படத்தைப் பற்றிய தகவல்களை, மிகவும் இரகசியமாக வைத்துள்ளார்.

இந்தப் படத்தின் இயக்குனர், அனேகமாக, புதுமுகமாகத்தான் இருப்பார் என்றும், செய்திகள் கசிகின்றன.

''படத்தைப் பற்றிய அனைத்து விஷயங்களும், பரம ரகசியமாக வைக்கப்படும்.

படம் வெளியானதும், ரசிகர்களுக்கு, ஒரு பெரிய த்ரில்லாகவும், இன்ப அதிர்ச்சியாகவும் இருக்கும்'' என்கிறாராம், தனுஷ்.

நடிப்பதைத் தவிர, படத் தயாரிப்புப் பணியிலும் கால் வைத்துள்ளதால், இப்போதெல்லாம், மிகவும் பிஸியாகவே காணப்படுகிறார், தனுஷ்.

## இனியொரு முறை அந்தத் தப்பைச் செய்யமாட்டேன் - நடிகை நயன்தாரா



ஒரு சில கசப்பான சம்பவங்களுக்குப் பின், நயன்தாராவின் இரண்டாவது வரவு அமர்க்களமாக ஆரம்பித்திருக்கிறது. விஷ்ணுவர்தன் இயக்கத்தில், அஜித், ஆர்யா, டாப்சி நடிக்கும் புதிய படத்தில், கதாநாயகியாக நடித்துவருகிறார்.

நயன்தாரா இந்தப் படத்தில் நீச்சல் உடையில் நடிப்பதாக வதந்திகள் வெளியாகின. இதைப் பார்த்ததும் நயனுக்கு டென்ஷன் எகிறி விட்டதாம்.

''யார் தான் இப்படி புளுகு மூட்டைகளை அவிழ்த்து விடுகிறார்களோ, தெரியவில்லை. ஏற்கனவே சில படங்களில் நீச்சல் உடையில் நடித்தேன். இதற்குப் பின், அது தவறு என்பதை உணர்ந்து கொண்டேன்.

எனவே, மீண்டும் ஒரு முறை அந்தத் தப்பைச் செய்ய மாட்டேன். இந்தப் படத்தில் எனக்கு கிளாமரான வேடம் என்றாலும், நீச்சல் உடை போன்ற காட்சிகள் எதுவுமில்லை என்கிறாராம் நயன்தாரா.



# கவிதைப் பூங்கா




## கௌரவம்

நீலவானத்து நிலவு
வளர்வதும் – தேய்வதும்
விதி செய்த குற்றம்தான் –
ஆனால்
தனது பாதையை விட்டு
தடம்மாறுவதில்லை.
முக்கனி மரங்களும் தம்
சத்தான பழங்களை – இந்த
மனித குலத்திற்கு
வழங்குவதை மறக்கலாம்–!
முல்லைக்கொடி பற்றிப்படர
பாரி தனது தேரைக்
கொடுத்தான்
வாழ்க்கை கற்று தந்த
அனுபவப் பாடம் இது
நினைவில் நிறுத்திக் கொள்
இனி – எங்களை
கடவுள்தான் காப்பாற்ற
வேண்டும் – என்று
முடிவாகச் சொல்லி,
யாருக்கும் துரோகியாக மா–
றாமல்
கௌரவமாக வாழ்ந்த – அந்த
பெரிய மனிதரை நாம்
வாழ்வில் மறக்கலாமா?



வீ – அருள்ராஜர்
பாடசாலை வீதி

## கல்லறைக் காதல்



கம்பன்
மகன் நான்
மன்னன் மகள் நீ
கல்லறைதான் நாம்
என்றும்
குடியிருக்கும் கோயில்.
இதுவே நிஜம்
நிழல் அல்லவே!

கவிஞர் தாரணி
கோப்பாய்


---

மாரிகால வேளையில்
வெறுக்கத்தூண்டும் மழையைப்போல்
கோடைகால நேரத்தில்
விருப்பத்தகா வெயிலைப்போல்
தாகமில்லா சமயத்தில்
பருகத்தோன்றா நீரைப்போல்
அதிகமாக கிடைத்து விட்டால்
அதனருமை புரிவதில்லை,
கிடைப்பதுவோ இறைந்தாலே
நினைக்கத்தோன்றும் மீண்டும் மீண்டும்
விரும்பும் போது கிடைக்காத அன்பை
கிடைக்கும் போது வெறுக்கலாமோ?
மறுத்து விட்ட உந்தன் அன்பு
கிடைக்கும் என விரும்புகிறேன்
வெறுக்கத்தோன்றும் மழையைக்கூட
ரசிக்கத் தூண்டும் மனதைப்போல்
வெறுத்த பின்னும் உந்தன்மனதை
விரும்பி நிற்கும் எந்தன்மனமும்....

பிரியா இராஜேந்திரம்
இருபாலை
கோப்பாய்,

## வருக தலைவா

காத்திட வேண்டியே வேலா
என்னெதிரில் வாடா என்றேன்
காலனை அந்த
வேலன்தான் அனுப்பினானோ! இல்லை
காலா! கரிகாலா! என்ற தேடினானோ!
வீழாதவனை மண்ணில்
வீழ்த்தினானோ?
வேலன் காலனாய் தன் பெயர்
மாற்றினானோ!
தமிழன் கண்ணீர் குடித்தானோ,
இல்லை இது சதிதானோ!
தமிழா!
நீயும் நம்பிட
தனியே இருந்து அலறிட
உண்மை ஏதும் உள்ளதுவோ?
உலகம் தான் அதை மறைத்ததுவோ!
இல்லை மறந்ததுவோ!
தலைவன்
தலை மறைவால்
தலைவா! என்றலறியே
தமிழர் நாம்
மீழாத் துயரில் மாழ்வோமோ? இல்லை
தலை குனிந்து வாழ்வோமோ?
என்செய்வோம்? ஏது செய்வோம்?
இத்தனை கேள்விகளுக்கும் எந்த
சித்தனிடமும் பதில் இல்லை
புத்தனிடமும் முடிவில்லை
ஐ நாவிடம் கூட முடிவில்லையாம் – ஆக
வேலா! காலடியில் வாடா
காலனைக் காட்டித் தாடா!
காலடியில் போட்டு நான் மிதித்திட
வேண்டும்
கரிகாலன் யாரெனக் காட்டிட வேண்டும்
வேரறுக்க வந்தவனை
வேறு வேறாக்கிட வேண்டும்
தமிழன் காலமெல்லாம்
கண்ணீரின்றி வாழ்ந்திட வேண்டும்
நல்லதொரு நாளிலே
வல்ல மாதலைவன் வந்திட வேண்டும்
எம் கண்ணீரை துடைத்தெறிய
வேண்டும்



ஸ்ரீ
மன்னார்.

## காத்திருக்கின்றேன் ...

கடவுளே..
காப்பாற்று என்ற
காந்த மொழி
கணீர் என ஒலித்தது
கடவுள்
கண்ணிருந்தும் பார்க்கவில்லையா!..
தன்
கண்மணிகள் சிந்திய
கண்ணீர் துளிகளை
துடைக்க நினைக்கவில்லையா!
கண்ணீர் சிந்தி
கரைந்த எம் வாழ்க்கையின்
எல்லை தெரியாமல் நாமிருக்க –
அடங்காத
காளைகளை அடைக்கும்
கம்பிக் கூட்டுக்குள்
கடதாசியாய்
கசக்கியே போட்டார்கள்!
கலங்கிய மனதுடன்
கர்த்தரின் ஆசியைப் பெற்று
கண்ணீருக்கு விடை கொடுக்கும் –
அந்த
காலத்தை எண்ணி
காத்திருக்கின்றேன் –நான்
மனதோடு....



p . திலீபன்
ஆட்காட்டி வெளி
மன்னார்.

## நினைவலைகள்

சிறிது காலம் உன்னிடம்
கதைத்துப் பழகினேன் – அந்த
சிறிது கால நினைவுடனே
நாட்கள் நகர்ந்து வந்தன.

சிறிது காலம் பழகிய பின்
உன்னை விட்டுப் பிரிந்துவிட்டேன்
சிறிது கால பிரிவு என்று
நான் நினைத்தேன் – ஆனால்
அதுவே நிரந்தர பிரிவாக ஆகிவிட்டது.

அதிர்ச்சியான செய்தியொன்று
செய்தியைக் கேட்டதும் – அது
வேறு யாராக இருக்கும் என்று
நானும் நினைத்துவிட்டேன்
அது பொய்யாக இருந்ததினால் – உன்னை
இறுதிவரைபார்க்க முடியவில்லை

இப்போது நீ இல்லை – உன்
நினைவுகளைச் சுமந்து
என் இதயம் மட்டும்
என்னிடம்
தனிமையில் வாழ்கிறேன் – நான்
எப்போதும் உன்னை நினைத்து!

கோகிலன்
கலை 2ம் பிரிவு
புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி




## இழப்பு

நாடு இழந்தோம்
மண் இழந்தோம்
மானம் இழந்தோம்
மக்களை இழந்தோம்
என் தலைவனை இழந்தோம்
இன்று மண்ணையும் இழந்து
எதுவும் இல்லாத அனாதைகள் போல்
நடு றோட்டில் நிற்கின்றோம்
கேட்பார் யாரும் இன்றி....



சி.வினோதன்
நெடுங்கேணி




### கவிதைப்பூங்கா வாசகர்களுக்கு...

தாங்கள் கவிதைப்பூங்காவுடன் கொண்டுள்ள இறுக்கமான பிணைப்பிற்கு என்றும் நன்றிகள். வாசகர்களின் கவிதைகள் நிறையவே குவிகின்றன. இடம் கொடுக்கும் நோக்குடன் கவிதைகளை 16 வரிகளுக்குள் மட்டுப்படுத்துவதுடன் தரமானதாகவும் அனுப்பி வைக்குமாறு வினயமாக வேண்டுகின்றோம்.



# புனைகதைப் புயல்



# சிறகொடிந்த பறவை

சிறுகதை

'விதி வரைந்த
பாதை வழியே
வாழ்க்கை....' எனும்
பாடல் வானலை
வழியே தவழ்ந்து வர,
வேணு தனக்காகவே
அப்பாடல், வானொலியில்
ஒலிபரப்பாவது போல்
உணர்ந்தாள். பாடலைக் கேட்ட
வண்ணம், தன் கடந்த கால
வாழ்க்கை பற்றி சிந்திக்கலானாள்.
வேணு அவள் குடும்பத்தில் ஒரே-
யொரு செல்லப்பிள்ளை.

அழகிய நந்தவனமாய் சந்தோஷ வானில் சிறகடித்தாள். அவளது குடும்பம் யுத்தம் எனும் அரக்கனால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்திருந்தது. சந்தோஷமாக இருந்த அவள் குடும்பத்தை வறுமை எனும் சூறாவளி பற்றிக் கொண்டதோடு, தாயும் நோய்வாய்ப்பட்டு படுக்கையிலேயே விழுந்தார். இருப்பினும் அவளது அப்பா அயராத உழைப்பினால் வேணுவைத் தொடர்ந்தும் படிப்பித்தார்.

படிப்பில் மிகக் கெட்டிக்காரியான வேணுவிற்குப் போட்டியாக வந்திணைந்தான் வினுராஜ். வினுராஜ் வசதியான குடும்பத்தைச் சேர்ந்தவன். குடும்பத்தில் ஒரேயொரு ஆண்வாரிசு. அந்தப் பாடசாலைக்கு வந்த சில நாட்களிலேயே வினுராஜ், வேணு ஆகிய இருவரும் நண்பர்களாகினர். வேணு பாடசாலைப் படிப்பை மட்டுமே நம்பியிருந்தாள். அதனால் மற்றைய மாணவர்களைப் போல ரியூசனுக்குச் செல்வதில்லை.

வேணு ஒருநாள் கூறினாள் ''நீங்க ஏன் ரியூசனுக்கு வாரதில்ல''? எனக் கேட்க, ''இல்ல வினுராஜ் என்னால முடியாது, ஸ்கூல் படிப்பிற்கே எவ்வளவு கஷ்ரப்பட்டு அப்பா பணம் தாரார், அதோட அம்மாட உடல் நிலையும் வரவர மோசமாக இருக்கு, வேணுமெண்டா நீங்க படிக்கிற கொப்பியத் தந்தீங்களென்றால், நான் நோட் பண்ணிற்று தாறன்'' எனக் கேட்டாள். ''இல்ல வேணு நீ ரியூசனுக்கு வர நான் கெல்ப் பண்றன்''. விணு ''இல்ல நான் யாரையும் கடமைப்படுத்த விரும்பல'' என மறுத்து விட்டாள் வேணு.

காலங்கள் உருண்டோடியது. பரீட்சையும் நெருங்கியது. இருவரும் படிப்பிலே மிகவும் கவனமாக இருந்து பரீட்சையையும் நன்றாக எழுதி முடித்தனர். பரீட்சை முடிவுற்றதும், '' வேணு நான் இங்லிஸ் ரியூசனுக்குப் போகப் போறேன். நீங்களும் வாறிங்களா''? என விணு கேட்க ''இல்ல இல்ல என்னால முடியாது. நான் வேலைக்கு றைபண்ணப்போறன். அப்பாவாலயும் முடியாது. பாவம் எவ்வளவு நாளைக்குத்தான் கூலி வேலை செய்து என்னையும், அம்மாவையும் பார்க்கிறது என்று கூறி மறுத்துவிட்டாள். வேணுவின் திறமையையும், முடும்ப நிலையையும் கண்ட அவளின் அப்பாவின் நண்பர் ஒருவர் தனியார் நிறுவனம் ஒன்றில், வேணுவிற்கு வேலை பெற்றுக் கொடுத்தார். இவர்கள் இருவரும் பிரிந்தாலும், இவர்களின் நட்புத் தொடர்ந்தது. காலப்போக்கில் இவர்கள் நட்பு காதலாக மலர்ந்தது. இருவரும் காதல் வானில் பறந்தனர். பரீட்சைப் பெறுபேறு வெளியாகியது.

இருவருக்கும் பல்கலைக்கழக அனுமதியும் கிடைத்தது. பாவம் வேணு, அவளால் மேற்கொண்டு படிக்க முடியவில்லை. ஆனால் வினுராஜ் அவளிடம், '' வேணு நான் படித்து முடித்ததும், உன்னைக் கடைசி வரை வைத்துக் காப்பாற்றுவன், நீ கவலப்படாத. எந்த நிலையிலும் நானுன்னைக் கைவிட மாட்டன், இது சத்தியம் என உறுதி மொழி கூறிவிட்டு மேற்படிப்புக்காகச் சென்றான்.

காலங்கள் பல உருண்டோடின. ஒருவாறு விணுவின் படிப்பும் முடிந்தது. விணு பல்கலைக்கழக விடுமுறை நாட்களில் வேணுவைச் சந்தித்து தமது பயிரை வளர்த்தே வந்தான். ஆனால் தனது காதலை எப்படிப் பெற்றோரிடம் தெரியப்படுத்துவது எனத் தவித்தவன், ஒருவாறாக வெளிப்படுத்தினான். பண ஆசை பிடித்த அவன் பெற்றோர். அவள் காதலை கடுமையாக எதிர்த்தனர். அத்தோடு வேணுவின் வீட்டுக்குச் சென்று, '' பிச்சக்கார நாய்க்கு பணக்கார மாப்பிள்ளை தேவைப்படுதோ, உங்க பொண்ணுக்கு ஒரு பிச்சக்காரனாப் பையனையும் பாத்து கட்டிவையுங்கோ, மீறி எங்கட பையன மயக்க நினைச்சா நடக்கிறதே வேற'' என மிரட்டி விட்டும் சென்றனர். இவர்களது மிரட்டலால் நோய்வாய்ப்பட்ட வேணுவின் தாய் சில மாதங்களிலேயே இவ்வுலகை விட்டுசென்று விட்டாள்.

தன் காதலே தாயிற்கு யமனாக வந்ததை நினைத்து, துடிதுடித்தாள். ஏன்டா ஏழையாய்ப் பிறந்த என் மனதில், காதலை விதைத்தாய் என வேணு நினைத்து அழுதாள், புலம்பினாள். தாயை இழந்தது மட்டுமன்றி தன் வாழ்க்கையே



கேள்விக்குறியாகியிருப்பதை எண்ணித் துடிதுடித்தாள். செய்வதறியாது நாதியற்று நின்றாள்.

தாயை இழந்து இவள் தவித்த வேளை, விநுராஜிற்கு வேறு பெண் பார்த்து திருமணம் நிச்சயிக்கப்பட்டு விட்டதை, தனது நண்பி மூலம் தெரிந்து கொண்டாலும், அவன் மீது கொண்ட அசையாத நம்பிக்கையால், காத்திருந்தாள் அவன் வருகைக்காக. ஆனால் நடந்ததோ வேறு. பணக்கார வினுராஜ் பெற்றோருக்காய் மனம் மாறிவிட்டான். '' வேணு என்னால அப்பா, அம்மாட சொல்லத் தட்ட முடியாது. என்னை மன்னிச்சிடு, நீ உனக்கேற்றால் போல ஒரு மாப்பிள்ளையப் பார்த்து கல்யாணம் பண்ணிக்கோ, நானும் அம்மா பார்த்த பெண்ணைக் கட்டுறன்'' என ஒரு கடிதம் எழுதி அனுப்பிவிட்டு, அவனும் திருமணம் செய்து கொண்டான். மனைவியையும் இழந்து மகள் நிர்க்கதியாய் நிற்பதைப் பார்த்த வேணுவின் தந்தையும், படுக்கையில் விழுந்தார். கடிதத்தைப் பார்த்த வேணு உலகமே தன் தலை மேல் இடிந்து விழுந்தது போல உணர்ந்தாள். ஆண்டவா சந்தோஷமா இருந்த என் வாழ்க்கையை, ஏன் காதல் என்ற வார்த்தையால் கசக்கிவிட்டாய்.

என் தாயை இழக்க வைத்தாய், துடிதுடிக்க வைத்தாய் ஏன் கடவுளே, ஏழை என்று பிறந்து விட்டால் கண்ணீர்க் கோலம்தான் போடவேண்டுமா? விடை தெரியாது தவித்தாள். தாயையும் இழந்து, காதலையும் இழந்த ஒரு நடைபிணமாய் கண்ணீர் சொரிந்தாள். வேணும்மா தண்ணி கொஞ்சம் தா என, தந்தை முனகும் சத்தம் கேட்டு சுய நினைவிற்கு வந்தவளாக, தன் விதியை எண்ணி நொந்தபடி தண்ணீர் எடுத்துச் சென்றாள் தந்தைக்கு...

அங்கே அவள் கண்ட காட்சி, அவளால் பேரதிர்ச்சிகொள்ள வைத்தது. ஆம் அவளது தந்தையார் படுத்த படுக்கையிலேயே அவரது உயிரை விட்டிருந்தார். வேணு தன்னை அறியாமலேயே ஓ வென உறக்கச் சத்தமிட்டு அழுதாள். ஊரவர்கள், அக்கம் பக்கத்தார், வேணுவின் அழுகுரல் கேட்டு ஓடிவந்தனர். வேணுவின் தந்தையாரின் தூரத்து உறவினரான பாக்கியம் மாமி, வேணுவிற்கு ஆதரவுக்கரம் நீட்டினாள். அப்பாவின் மரணக் கிரியைகள் முடிவடைந்து, இரத்த உறவுகளையும், காதலையும் ஏற்று நிற்கின்ற வேணுவிற்கு பாக்கியம் மாமியின் நேசக்கரம் ஒரு தெம்பையும், ஆதரவையும், மன உறுதியையும் தந்தது. சிறகொடிந்த பறவை போல அவள் வாழ்க்கையும் தொடர்கிறது.


முற்றும்.

ஆக்கம்:-

கே. மது.
பழம்பாசி.

# ஆன்மீக உலகம்

## இந்து சமயத்தின் அடிப்படைகள்



சிந்து நதிக்கரையில் வசித்து வந்தவர்களை 'சிந்துக்கள்' அல்லது 'இந்துக்கள்' எனப் பாரசீகரும், கிரேக்கரும் அழைத்து வந்தனர். அவர்கள் பின்பற்றிய சமயமே 'இந்து சமயம்' என்று சரித்திர ஆசிரியர்கள் கூறுகின்றனர். இந்திய நாட்டினரின் மதமே இந்துமதம் எனப் பொருள் கூறுவாரும் உண்டு.

ஒரு நாட்டின் பெயராலோ, ஒரு ஆற்றின் பெயராலோ நமது ஒப்புயர்வற்ற மதம் ஏற்பட்டது என்பது பொருத்தமற்றது. அதனால் இதன் உண்மைப்பொருளை அறிந்து கொள்ள வேண்டியது அவசிய மாகும்.

'இந்துமதம்' எனும் பெயர் அதன் கொள்கையை மேற்கொண்டு வந்ததாகும். 'இந்து, ஹிந்து' என்ற சொல்லை ஹிம்-ஹிம்சையில் துக்கிப்பவன் எனப் பொருள்படும். ஒரு உயிர் எந்தக் காரணத்தினாலாவது வருந்துவதாக இருந்தால், அத்துயரத்தைத் தனக்கு ஏற்பட்ட துயரமாகக் கருதி அத்துயரை அகற்ற முன்வர வேண்டும். அத்தகையவனே ஒரு உயர் இந்துவாவான். அப்பண்பு மிக்க மக்களைக் கொண்ட மதமே இந்து மதமாகக் கொள்ளப்படும்.

அன்பே கடவுள். இறைவன் எல்லா உயிர்களிடத்தும் நீங்காமல் வாழ்கிறான். எல்லா உயிர்களின் உடம்பையே அவன் கோயிலாகக் கொண்டுள்ளான். ஆதலால் எந்த உயிரின் உடலுக்கும் துன்பம் நேராவண்ணம் அவைகளிடம் அன்பு செலுத்தினால் அருள் வடிவாகிய ஆண்டவனது அருளைப் பெறலாம். இதனைத் திருமூலர் தனது திருமந்திரத்தில் சிறப்பாகக் கூறுகின்றார்.

"அன்பும் சிவமும் இரண்டென்பர்
அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே"
என்கிறார்

'இந்துமதம்' என்பதற்கு 'சனாதன தர்மம்' என்று வேறு ஒரு பெயரும் உண்டு, இதற்கு அழிவில்லாத அறம் என்பது பொருள். மேலும் இந்து சமயம் முறையே திருநெறி, அருள்நெறி, தவநெறி, மெய்நெறி, சன்மார்க்க நெறி என்ற பல பெயர்களைக் கொண்டது.

சமயம் என்பதற்கு 'சமை' என்பது பகுதியாய் உடம்பை வளர்ப்பதற்கு உணவுப்பொருளைச் சமைப்பது போல இறைவனை அடைவதற்கு மனதைப் பக்குவப்படுவது என்பது இதன் பொருளாகும்.

இந்து சமயம் காலத்தால் மிகவும் தொன்மையானது. அது ஒரு காலத்தில் உலகெங்கும் பரவியிருந்தது என்பதைத் தற்காலப் புதைபொருள் ஆராய்ச்சி முதலியவற்றால் அறியலாம். பிற சமயங்கள் கூறும் கொள்கைகள் பல, நமது இந்து சமயத்தில் முக்கிய இடம் பெற்றுள்ளன.

ஆதலால் உலகிலுள்ள எல்லா மதங்களுக்கும் தாய்ச்சமயமாக, இந்துசமயம் உள்ளது எனக் கூறுவது மிகையாகாது.

## விசுவாசத்துடன் ஜெபம் பண்ணுவோம்



சோர்ந்து போகாமல் எப்பொழுதும் ஜெபம் பண்ண வேண்டும் என்பதைக்குறித்து, அவர்களுக்கு ஒரு உவமையைச் சொன்னார். ஒரு பட்டணத்திலே ஒரு நியாயாதிபதி இருந்தான். அவன் தேவனுக்குப் பயப்படாதவனும், மனுஷரை மதியாதவனுமாயிருந்தான். அந்தப் பட்டணத்திலே ஒரு விதவையுமிருந்தாள், அவள் அவனிடத்தில்ப் போய், எனக்கும் என் எதிராளிக்கும் இருக்கிற காரியத்தில் எனக்கு நியாயஞ் செய்ய வேண்டும், என்று தாழ்மையாக விண்ணப்பம் பண்ணினாள்.

வெகுநாள் வரைக்கும் அவனுக்கு மனமில்லாதிருந்தது. பின்பு அவன், நான் தேவனுக்குப் பயப்படாமலும் மனுஷரை மதியாமலும் இருந்தும், இந்தவிதவை என்னை எப்பொழுதும் தொந்தரவு செய்கின்றபடியினால், இவள் அடிக்கடி வந்து என்னை அலட்டாதபடி இவளுக்கு நியாயஞ் செய்யவேண்டும். என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டான் என்றார்.

பின்னர் கர்த்தர் அவர்களை நோக்கி! அநீதியுள்ள அந்த நியாயாதிபதி சொன்னதைச் சிந்தித்துப் பாருங்கள். அந்தப்படியே தேவன் தம்மை நோக்கி இரவும், பகலும் கூப்பிடுகிறவர்களாகிய தம்மால், தெரிந்துகொள்ளப்பட்டவர்களின் விஷயத்தில் நீடிய பொறுமையுள்ளவராயிருந்து அவர்களுக்கு நியாயஞ் செய்யாமலிருப்பாரோ? சீக்கிரத்திலே அவர்களுக்கு நியாயம் செய்வார், என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். (லூக்கா18:1-8)

எங்களுடைய வாழ்க்கையிலும் அனேக பிரச்சனைகள் கஷ்டங்கள், துன்பங்கள், வேதனைகள் காணப்படும். அனேகமான தேவைகள், கடன் பிரச்சனைகள், திருமண காரியங்கள், இன்னும் தீர்க்க முடியாத பிரச்சனைகள், வெளியில் சொல்லமுடியாத, வெட்கத்துக்குரிய பாவமான காரியங்கள் காணப்படும்.

இவை எல்லாவற்றிற்கும் தீர்வுகாண வேண்டுமாயின், நாங்கள் சோர்ந்து போகாமல் தேவனோடு போராடி ஜெபித்து தீர்வைப் பெற்றுக்கொள்ள வேண்டும் கேளுங்கள் கொடுக்கப்படும், என்று இயேசு வாக்குத்தத்தம் செய்துள்ளார்.

நாம் விசுவாசத்தோடு கேட்கும்போது, தேவன் கேட்டதைத் தருவார், எங்கள் ஜெபத்திற்கு நிச்சயம் பதில் தருவார். கேளுங்கள், அப்பொழுது தான் உங்களுக்கு கொடுக்கப்படும் (மத்தேயு 7-7) ஏனென்றால் கேட்கிறவன் எவனோ அவனே பெற்றுக் கொள்கிறான் (மத்தேயு 7-8)

உன்தேவனாகிய கர்த்தரை (இயேசுவை) நீ வேண்டிக்கொண்டதின் படியெல்லாம் அவர் செய்வார்
(உபாகமம் 16-18)

## திருக்குர்ஆனின் நற்போதனைகள்



**01. உண்மை பேசுக!**

அல்லாஹ், "இது உண்மை பேசுபவர்களுக்கு அவர்களுடைய உண்மை பலனளிக்கும் நாளாகும். கீழே சதா நீரருவிகள் ஒலித்தோடிக்கொண்டிருக்கும் சுவனபதிகள் அவர்களுக்குண்டு, அவற்றில் அவர்கள் என்றென்றும் இருப்பார்கள். 5:119

**02. நேர்மையாகப் பேசுக!**

ஈமான் கொண்டவர்களே! நீங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். (எந்நிலையிலும்) நேர்மையான சொல்லையே எப்போதும் சொல்லுங்கள்.

**03. அழகானதைப் பேசுக!**

பெற்றோர்களுக்கும், உறவினர்களுக்கும், அநாதைகளுக்கும், மிஸ்கீன்களான ஏழைகளுக்கும் நன்மை செய்யுங்கள். மனிதர்களிடம் அழகானதை வார்த்தைகளைப் பேசுங்கள். 2:83

**04. கனிவாகப் பேசுக!**

உறவினர்களோ, அநாதைகளோ, ஏழைகளோ வந்து விடுவார்களானால் அவர்களுக்கும் வருமானத்தின் ஒருபகுதியை வழங்கி அவர்களை மகிழ்ச்சிப்படுத்துங்கள். மேலும் அவர்களிடம் கனிவான வார்த்தைகளைக் கொண்டே பேசுங்கள். 4:8

**05. நியாயமாகப் பேசுக!**

நீங்கள் பேசும் பொழுது அதனால் பாதிக்கப்படுபவர் நெருங்கிய உறவினராக இருந்த போதிலும்-நியாயமாகவே எப்போதும் பேசுங்கள். 6:152

06. அன்பாகப் பேசுக!

அண்டை வீட்டிலுள்ள உறவினர்களுக்கும், அருகிலுள்ள அண்டை வீட்டாருக்கும், (பிரயாணம், தொழில் போன்றவற்றில்) கூட்டாளிகளாக இருப்போருக்கும், வழிப்போக்கர்களுக்கும், உங்களிடமுள்ள அடிமைகளுக்கும் அன்புடன் உபகாரம் செய்யுங்கள்.

நிச்சயமாக அல்லாஹ் கர்வமுடையோராக, வீண் பெருமை உடையோராக இருப்பவர்களை எப்போதும் நேசிப்பதில்லை. 4:36

**07. வீண்பேச்சைத் தவிர்த்துவிடுக!**

நம் வசனங்களைப் பற்றி வீண் விவாதம் செய்துகொண்டிருப்போரை நீர் கண்டால், அவர்கள் அதைவிட்டு வேறு விஷயங்களில் கவனம் செலுத்தும் வரையில், நீர் அவர்களைப் புறக்கணித்துவிடும். 6:68

**08. பொய் பேசாதீர்!**

உங்கள் நாவுகள் (சில பிராணிகள் பற்றி) பொய்யாக வர்ணிப்பது போல், இது ஹலாலானது, இது ஹராமானது என்று அல்லாஹ்வின் மீது பொய்யை இட்டுக்கட்டாதீர்கள்-

நிச்சயமாக, எவர் அல்லாஹ்வின் மீது பொய்யை இட்டுக்கட்டுகிறார்களோ அவர்கள் வெற்றியடையமாட்டார்கள்.

**09. புறம் பேசாதீர்!**

ஒருவரைப் பற்றி அவர் இல்லாதவிடத்து புறம் பேச வேண்டாம்.

**10. ஆதாரமின்றி பேசாதீர்!**

யாதோர் ஆதாரமுமின்றி, அல்லாஹ்வின் வசனங்களைப் பற்றித் தர்க்கம் செய்வது, அல்லாஹ்வினிடத்திலும் ஈமான் கொண்டவர்களிடத்திலும் மிகவும் வெறுக்கப்பட்டதாகும். 40:35

**11. அவதூறு பேசாதீர்!**


எவர்கள் மு:.மினான ஒழுக்கமுள்ள, பேதைப் பெண்கள் மீது, அவதூறு செய்கிறார்களோ, அவர்கள் நிச்சயமாக இம்மையிலும், மறுமையிலும் சபிக்கப்பட்டவர்கள் ஆவார்கள். 24:23'

சகல விதமான தையல்
இயந்திரங்களையும் உங்கள்
இருப்பிடங்களுக்கே வந்து
சிறந்த முறையில் 3 மாத
உத்தரவாதத்துடன் திருத்திக்
கொடுக்கப்படும்.


தொடர்புகளுக்கு
பாபு தையலகம்
0776906182
243/1, தேக்கவத்தை
வவுனியா.



# அறிவியல் உலகம்



## இந்தியாவில் கண்ணில்லாத புதிய கெளுத்தி மீன் கண்டுபிடிப்பு



இந்தியாவில் கண்களே இல்லாத, புதிய வகை ‘கெளுத்தி மீன்’ ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக கடல்சார் உயிரியல் ஆய்வாளர்கள் அறிவித்துள்ளனர். கேரள மாநிலம், திருச்சூர் மாவட்டத்தின் இரிஞ்சாலக்குடாப் பகுதியிலுள்ள, ஒரு ஆழ் கிணற்றிலேயே கண்ணில்லாத இந்தக் கெளுத்தி மீன் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்தியச் சுற்றுச்சூழல் மற்றும் அதன் கட்டமைப்பில், கண்களே இல்லாத கெளுத்தி மீன்களைக் காண்பது அரிது. இவ்வகையான உயிரினங்கள் பெரும்பாலும், நிலத்தின் அடியில் சேறும் சகதியும் இருக்கும் பகுதியில் வசிப்பவை. இந்தியக் குடியரசின் முன்னாள் தலைவர் அப்துல் கலாமின் பெயரை உள்ளடக்கி ‘ஹொராக்லனிஸ் அப்துல்கலாமி’ என்று இதற்குப்பெயரிடப்பட்டுள்ளது.

ஙரத்த மீன்கள் என்றழைக்கப்படும் இந்த அரிய வகை மீனினங்கள், ஆழ்ந்த சிவப்பு நிறத்தில் சுமார் 3.78 சென்டி மீட்டர் நீளம் உள்ளவை. இந்தப் புதிய மீனினத்தின் புறத்தோற்றம் குறித்த, அடிப்படை ஆய்வுகள் முடிந்து விட்டதாகவும், அதனுடைய மூலக் கூறுகள், அது தோன்றிய விதம் குறித்த ஆய்வுகள், தற்போது நடைபெற்று வருவதாகவும், டாக்டர் பிஜாய் நந்தன் கூறுகிறார்.

அந்த ஆய்வுகள் மூலம் அவை எங்கிருந்து தோன்றின, எந்த உயிரினத்திலிருந்து இவை உருப்பெற்றன, மற்ற உயிரினங்களுக்கும் இவற்றுக்குமான தொடர்புகள் போன்றவை, தெரியவரக்கூடும் எனவும் வல்லுநர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள்.

## மனிதக் கையின் வளர்ச்சி: சண்டையை இலக்காகக் கொண்டது.

மனிதனின் கையானது கருவிகளைச் செய்து, பயன்படுத்துவதை இலக்காகக் கொண்டது மாத்திரமன்றி, கைகளைப் பொத்திப் பிடித்து, சண்டையிடுவதை அடிப்படையாகக் கொண்டும், பரிணாம வளர்ச்சி கண்டிருக்கிறது என்று, ஒரு புதிய ஆய்வு கூறுகின்றது.

இயற்கையின் தேர்வானது, கைகளை ஆயுதமாகப் பயன்படுத்துவதற்குச் சாதகமாக இருந்திருக்கிறது என்றும், அத்துடன் முன்னர் நினைத்ததை விட, மனித வளர்ச்சியில் கைகளின் ஆக்ரோஷம் பெரும்பங்கை ஆற்றியிருகிறது என்றும், அமெரிக்காவின் பரிணாம வளர்ச்சியியல் விஞ்ஞானிகள் நம்புகிறார்கள். கைகளின் அமைப்பானது சண்டையிடுவதை இலகுவாக்கியுள்ளது.

எமது மிகவும் நெருங்கிய உறவினர்களான, மனிதக் குரங்குகளை விட நமது கைகள், சண்டையிடுவதற்கு ஏற்ற வகையில் வளர்ச்சி கண்டுள்ளன.

விஞ்ஞானிகள் தமது இந்தப் புதிய தத்துவத்தைத் தற்காப்புக் கலை கலைஞர்களிடம் பரிசோதித்துள்ளனர். இதனடிப்படையிலேயே இக்கருத்தை வெளியிட்டுள்ளனர்.

## புராஸ்டேட் புற்றுநோயை அறிய புதுப் பரிசோதனை



பொருளாதார ரீதியில் வளர்ச்சியடைந்த நாடுகளில் இருக்கும் ஆண்களை, கணிசமாகப் பாதிக்கும் புராஸ்டேட் புற்றுநோயின் தீவிரத்தன்மையைக் கண்டுபிடிக்கும், இரத்தப்பரிசோதனையொன்றை லண்டனில் இருக்கும் புற்றுநோய் ஆய்வுமையம் ஒன்று வடிவமைத்துள்ளது.

ஆண்களின் இனப்பெருக்க உறுப்பில் இருக்கும், புராஸ்டேட் சுரப்பியில் ஏற்படும் புற்றுநோயில், வெவ்வேறு வகைகள் இருக்கின்றன. இவற்றை தீவிரத்தன்மை கொண்டவை என்றும், தீவிரத்தன்மையற்றவை என்றும், இரண்டு பொதுவகைகளாக மருத்துவர்கள் வகைப்படுத்தியுள்ளனர்.

இதில் தீவிரத்தன்மையற்ற புராஸ்டேட் புற்றுநோயால் பாதிக்கப்படுபவர்கள், உரிய சிகிச்சை மூலம் பல ஆண்டுகள் வாழமுடியும். அதேசமயம், தீவிரத்தன்மையற்ற புராஸ்டேட் புற்றுநோய் தாக்கியவர்கள், சில மாதங்களிலேயே மரணிப்பார்கள்.

இப்படியான தீவிரத்தன்மை கொண்ட புராஸ்டேட் புற்றுநோயை, தீவிரத்தன்மையற்ற புராஸ்டேட் புற்றுநோயிலிருந்து, வேறுபடுத்தி அறிவதற்கான இரத்தப் பரிசோதனைமுறையொன்றையே லண்டன் ஆய்வாளர்கள் கண்டறிந்திருக்கிறார்கள்.

மோசமான புராஸ்டேட் புற்றுநோயைத் தோற்றுவிக்கக்கூடிய, குறிப்பிட்ட ஒன்பது மரபணுக்களை, தாங்கள் இதுவரையில் அடையாளம் கண்டறிந்திருப்பதாக தெரிவிக்கும் லண்டன் ஆய்வாளர்கள், புராஸ்டேட் புற்றுநோய் தாக்கிருப்பதாகச் சந்தேகிக்கப்படும் நபரின் இரத்தத்தைப் பரிசோதிப்பதன் மூலம், அவர்களின் இரத்தத்தில் இந்த குறிப்பிட்ட ஒன்பது மரபணுக்கள் இருந்தால், அவர்களுக்கு அவசர சிகிச்சையளிப்பதற்கு, வழிபிறந்திருப்பதாக மருத்துவர்கள் கூறுகின்றார்கள்.

புராஸ்டேட் புற்றுநோயை எதிர்கொள்வதில், இந்தப் புதிய இரத்தப் பரிசோதனை கூடுதல் உதவியாக இருக்கும், என்கிறார்கள் இந்த மருத்துவ ஆய்வாளர்கள்.

## ஒன்லைனில் புகைப்படங்களை பகிருவதற்கான புதிய சேவை





Nikon Image எனும் புகைப் படங்களை ஒன்லைனில் பகிருவதற்கான சேவையினை ஜனவரி 28 ஆம் திகதி அன்று அறிமுகப்படுத்தவிருப்பதாக Nikon நிறுவனம் தெரிவித்துள்ளது.

my picture town எனும் தற்போதுள்ள சேவைக்கு மாற்றீடாக அறிமுகப்படுத்தப்படும் இப்புதிய சேவையின் மூலம் பயனர்கள் தமது புகைப்படங்களை இலகுவான முறையில் தரவேற்றம் செய்துகொள்ள முடிவதுடன், அவற்றினை பகிர்ந்து கொள்ளும் வசதிகளும் தரப்பட்டுள்ளன.

Basic மற்றும் Special என இரண்டு வகைகளை உள்ளடக்கியதாகக் காணப்படும் இச்சேவையில் Basic வகை மூலம் 2 GB வரையான சேமிப்பு வசதியினை முற்றிலும் இலவசமாக பெற்றுக்கொள்ள முடியும்.

Nikon கமெராவினை சொந்தமாக கொள்வனவு செய்து பயன்படுத்துபவர்களுக்கு, 20 GB சேமிப்பு வசதியை வழங்கும் Special வகை சேவையும் காணப்படுகின்றது.

## கண்களினால் கணனியை இயக்க புதிய சாதனம்



வளர்ந்துவரும் தொழில்நுட்பம் தற்போது கண்ணசைவின் மூலம் கணனிகளை இயக்கக்கூடிய புத்தம் புதிய சாதனம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. Tobii REX எனப்படும் புதிய எலக்ரோனிக் சாதனம் USB இணைப்பு மூலம் செயற்படக்கூடியதாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

மைக்ரோசொப்ட் நிறுவனம் புதியதாக அண்மையில் வெளியிட்ட விண்டோஸ்-8 இயங்குதளங்களில் செயற்படக்கூடியவாறு வடிவமைக்கப் பட்டுள்ளது. அதாவது இதன் ஸ்கேனர் கண்ணின் கருவிழியின் அசைவுகளை வைத்து கட்டளைகளை கணனிக்கு அனுப்புகிறது.

2013 ஆம் ஆண்டின் ஆரம்ப நாட்களில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இச்சாதனத்தின் விலை சுமார் 995 அமெரிக்க டொலர்கள் ஆகும்.

## Asus அறிமுகப்படுத்தும் Vivo Tab ME 400 கணனிகள்




Asus நிறுவனம் நவீன தொழில்நுட்பங்களினை உட்புகுத்தி உருவாக்கிய Vivo Tab ME 400 கணனிகளை அறிமுகப்படுத்துகின்றது. 10.1 அங்குல அளவுடைய மற்றும் 1366 x 768 Pixel Resoluation கொண்ட GH திரையினை கொண்டதாகக் காணப்படும் இக்கணனிகள் விண்டோஸ் 8 இயங்குதளத்தினை அடிப்படையாகக் கொண்டு செயற்படவல்லன.

இவற்றுடன் 9.5 மணித்தியாலங்கள் தொடர்ச்சியாக மின்னை வழங்கக்கூடிய மின்கலங்கள் 8 மெகாபிக்சல்கள் உடைய பிரதான கெமரா, 2 மெகாபிக்சல்கள் உடைய துணைக்கெமரா ஆகியவையும் உள்ளடக்கப்படுகின்றன.

ஜனவரி 31 ஆம் திகதிகளில் அறிமுகப்படுத்தப்படவுள்ள இவற்றின் பெறுமதியானது, 400 யூரோக்கள் ஆகும்.

## கீறல்கள் விழுந்த CD க்களிலிருந்து தகவல்களைப் பாதுகாக்க புதிய மென்பொருள்



கீறல் விழுந்த இறுவெட்டுக்களை நாம் பயன்படுத்தும் போது, கணனியில் cannot read from the source destination என்ற பதில் வரும். இப்பிரச்சினையைத் தீர்க்க, சிறந்த மென்பொருள் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அதற்காக www.sobuster.com என்ற இணையதளம் வழங்கும் மென்பொருளை பதிவிறக்கம் செய்து கொள்ளவும். பின்பு அந்த மென்பொருளை ரன் செய்து சி.டியைப் பரிசோதிக்க வேண்டும். அப்போது இம்மென்பொருள் பாதிக்கப்பட்ட சி.டியிலுள்ள தகவல்களைப் பெற்றுத் தரும்.

அதிகமாகப் பாதிக்கப்பட்டிருப்பின் பாதிக்கப்பட்ட பகுதிகளை மட்டும் விட்டுவிட்டு மற்றப்பகுதிகளில் உள்ள தகவல்களைப் பெற்றுத்தரும்.

இதன் மூலம் முடிந்தவரை தகவல்களைப் பெறலாம். இந்த மென்பொருள் ஒரு கட்டண மென்பொருள் என்றாலும் டோரண்ட் தளங்களில் ∴ புல் வெர்ஷனை தரவிறக்கம் செய்து கொள்ளுங்கள்.

# விளையாட்டு உலகம்

## பெண்கள் உலகக் கோப்பை – இந்தியா 2013

ICC WOMEN'S WORLD CUP
India 2013

10 வது பெண்கள் உலக கோப்பை கிரிக்கெட் போட்டி, மும்பை மற்றும் கட்டாக் நகரில் நடந்து வரு கிறது. இதில் பங்கேற்றுள்ள 8 அணிகள், இரண்டு பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளன.

"ஏ"பிரிவில் இந்தியா,மேற்கிந்தியத் தீவுகள், இங்கிலாந்து, இலங்கை அணிகளும், "பி", பிரிவில் அவுஸ்திரேலியா, பாகிஸ்தான், நியூசிலாந்து, தென் ஆபிரிக்கா அணிகளும் இடம் பெற்றுள்ளன.

ஒவ்வொரு அணியும் தங்கள் பிரிவில் உள்ள மற்ற அணியுடன் தலா ஒரு முறை மோத வேண்டும். லீக் முடிவில் இரண்டு பிரிவிலும், முதல் 3 இடங்களை பிடிக்கும் அணிகள் சூப்பர் சிக்ஸ்" சுற்றுக்கு தகுதி பெறும்.

இந்நிலையில் A பிரிவிலுள்ள நடப்பு சம்பியன் இங்கிலாந்து, இலங்கை, மேற்கிந்தியத் தீவுகள் தலா இரு போட்டிகளில் வெற்றிகொண்டு, சுப்பர் 6 சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

B பிரிவிலுள்ள அவுஸ்திரேலியா 3 போட்டிகளிலும் வெற்றிபெற்றதுடன் நியுசிலாந்து, தென்னாபிரிக்கா ஆகிய அணிகள் சுப்பர் 6 சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளன.

சுப்பர் சிக்ஸ் ஆட்டங்கள் 8 ஆம் திகதி தொடங்குகின்றன. இதேவேளை 7 ஆம் இடத்துக்கான போட்டியில் இந்தியா - பாகிஸ்தானை சந்திக்கவுள்ளது.

## காற்பந்து சூதாட்டம், விசாரணையில் அம்பலம்?



காற்பந்து சூதாட்ட உலகின் தலைமைப்பீடமாக, சிங்கப்பூர் இருந்தமை தெரிய வந்துள்ளது. இதுவரை இச்சம்பவத்தில் 50பேர் வரைக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொதுவாக கிரிக்கட் போட்டிகளில் தான் 'மட்ச் பிக்சிங்' செய்வது வழக்கம். இப்போது காற்பந்துப் போட்டிகளிலும் 'மட்ச் பிக்சிங்' செய்வது அம்பலமாகியுள்ளது. இது தொடர்பாக 'இன்டர்போல்' போல, 'யுரோபோல்' என்ற சர்வதேச அமைப்பு, கடந்த 18 மாதங்களாக விசாரணை நடத்தியது.

16 000 மின்னஞ்சல்கள் சோதனை செய்யப்பட்டு, 30 நாடுகளில் நடந்த 680 போட்டிகளில் 'பிக்சிங்' நடந்தமை உறுதியாகியுள்ளது. 'வீரர்கள், ரெப்ரிகள், மற்றும் நிர்வாகிகள்' என மொத்தம் 425 பேர் கைதாகியுள்ளனர்.

8பேர் தேடப்படுகின்றனர். உலகெங்கும் கலந்திருக்கும் சூதாட்டக்காரர்கள் போட்டிகளின் போது நிர்வாகிகளுடன் இணையதளம், கைத் தொலைபேசி மூலமாக ஆசியாவிலுள்ள புக்கிகளுடன் தொடர்பு கொண்டு, போட்டிகளின் முடிவைத் தீர்மானிப்பார்களாம்.

உலகிலேயே குறைவான அளவில் ஊழல் நடக்கும் நாடு, என்ற பெருமை பெற்ற சிங்கப்பூர், காற்பந்தாட்ட பிக்சிங்குக்கு தலைமைப்பீடமாக இருப்பது, இப்போது தெரிய வந்துள்ளது.

## பி.சி.சி.ஐ க்கு வருமான வரி நோட்டீஸ் ரூ.2300 கோடி வரி பாக்கி

பி.சி.சி.ஐ க்கு மற்றொரு சிக்கல். ரூ2300 கோடி வருமான வரி கட்ட வேண்டும் என நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது. இதிலிருந்து எப்படி தப்புவதென்று விழிக்கிறது.

இந்தியாவின் கிரிக்கட் தவிர்ந்த அனைத்தும், மத்திய அரசின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்து வருகிறது. கிரிக்கட் தனியார் நிறுவனமான இந்திய கிரிக்கட் போர்ட்டின் (பி.சி.சி.ஐ) கீழ் உள்ளது.

கிரிக்கட்டை பிரபலப்படுத்தும் நோக்கில், முதலில் வருமான வரியிலிருந்து மத்திய அரசு விலக்கு அளித்திருந்தது.

இந்நிலையில் உலகின் பணக்கார விளையாட்டு அமைப்பாக உள்ள பி.சி.சி.ஐக்கு, கடந்த 2008 இல் ஐ.பி.எல் அமைப்பு துவங்கி, பணம் கொட்டத்துவங்கியதிலிருந்து கடந்த 2003, 2004 முதல் 2009, 2010 வரை, அதாவது வருமான வரி விலக்கு இருந்த காலத்தையும் சேர்த்து, 7 ஆண்டுக்கு கிடைத்த அனைத்து வருமானத்துக்கும் சேர்த்து, மொத்தம் 2,300 கோடி ரூபா வரி கட்ட வேண்டும் என, மத்திய அரசின் வருமான வரித்துறை இப்போது உத்தரவிட்டுள்ளது.

இதனால் இரு தரப்பினரிடையேயும் கருத்து மாறுதல்கள் ஏற்பட்டிருக்கும் நிலையில், இது குறித்து எடுக்கப்படும் மேலதிக தீர்மானங்கள் அடுத்த இரு வாரங்களின் பின் தெரிய வரலாம்.

## ஹொக்கி - டில்லிக்கு 9 வது வெற்றி



உள்ளூர் ஹொக்கி அணிகள் பங்கேற்கும், 1 வது ஹொக்கி இந்திய லீக் தொடர் (எச்.ஐ.எல்) நாட்டின் முக்கிய நகரங்களில் நடக்கிறது. இதில் 'டில்லி வேவ்ரைட்ஸ், ராஞ்சி ரினோஸ், மும்பை மெஜிசியன்ஸ்' உள்ளிட்ட 5 அணிகள் பங்கேற்கின்றன.

இப்போட்டிகளில் டில்லி அணியின் ஆதிக்கம் தொடர்கிறது. இதுவரை விளையாடிய 11 லீக் போட்டிகளில், டில்லி வேவ்ரைட்ஸ் அணி 9 வெற்றி 2 சமம் உட்பட, 19 புள்ளிகளுடன் முதலிடத்தில் நீடிக்கிறது. தவிர, தோல்வி கண்டிராத அணி என்ற பெருமையையும் தக்க வைத்துக்கொண்டுள்ளது.

இந்நிலையில், 'டொப் 5' வரிசையில், 'டில்லி வேவ்ரைட்ஸ் (49 புள்ளி), ராஞ்சி (36 புள்ளி), பஞ்சாப் (29 புள்ளி), மும்பை (14 புள்ளி)' அடிப்படையில் இடம்பெற்றுள்ளன.

## டெஸ்ட் அணியில் மீண்டும் இடம் பிடிப்பேன் - ரெய்னா நம்பிக்கை.



சமீப காலங்களில் போட்டிகளில் சிறப்பான ஆட்டத்தை வெளிப் படுத்தி வராத நிலையில் இந்திய கிரிக்கட் அணியின் வீரர் சுரேஷ் ரெய்னா டெஸ்ட் அணியில் இருந்து விலக்கப்பட்டிருந்தார். இந்நிலையில், தற்போது, மும்பையில் நடைபெற்றுவரும் இராணிக் கோப்பை கிரிக்கட் போட்டியில் ஆடிவரும் அவர் நிருபர்களிடம் 'தான் மீண்டும் டெஸ்ட் அணியில் இடம் பிடிப்பேன்' என்று கூறியுள்ளார்.

தொடர்ந்தும் 'அதற்காக நான் கடுமையாக உழைத்து வருகிறேன். இப்போது நல்ல போர்மில் உள்ளேன். அவுஸ்ரேலியாவுக்கு எதிரான அணியில் இடம் பிடிக்க வேண்டும் என்பது எனது நோக்கம் என்று கூறினார்.

## மும்பையணியின் ஆலோசகராக கும்ளே



ஐ.பி.எல் மும்பை இன்னிங்ஸ் அணியின் ஆலோசகராக, இந்திய அணியின் முன்னாள் கேப்டன் அனில் கும்ளே நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்திய அணியின் சுழல் ஜாம்பவான், அனில் கும்ளே சர்வதேச கிரிக்கெட் போட்டியில் இருந்து ஓய்வை அறிவித்துள்ள அவர் டெஸ்ட் (619விக்கெட்), 271 ஒருநாள்(337 விக்கெட்) போட்டிகளில் விளையாடி உள்ளார். ஓய்வுக்குப்பின் முதல் மூன்று தொடரில், பெங்களூர் ராயல் சாலஞ்சர்ஸ் அணியின் தேர்வாளராகச் செயல்பட்டார்.

கடந்த 2011 இல் ஐ.பி.எல், போட்டியில் இதனை அறிவித்தார். பெங்களூர் அணியின் ஆலோசகராக இருந்த கும்ளே கூறுகையில், பெங்களூர் அணியின் ஆரோசகராக பணியாற்ற வாய்ப்பு வழங்கிய, பெங்களூர் அணி உரிமையாளருக்கும் நிர்வாகத்திற்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன், எனக் கூறினார்.

எனது பணியைச் சிறப்பாக செய்தேன் என்ற திருப்தியுடன் பெங்களூர் அணியில் இருந்து விலகுகிறேன். மும்பை அணியின் ஆலோசகராக நியமிக்கப்பட்டது எனக்கு மகிழ்ச்சி அளிக்கிறது என்றார்.

## இரட்டை மகிழ்ச்சியில் மெர்ஸி



ஆர்ஜென்டினாவின் நட்சத்திரக் கால்பந்தாட்ட வீரர் மெர்ஸி (25) தற்போது பார்சிலோனா அணிக்காக விளையாடி, சமீபத்தில் "பிபா" சிறந்த வீரர் விருதை தொடர்ந்து, நான்காவது முறையாக வென்று சாதனை படைத்துள்ளார்.

இம் மகிழ்ச்சியில் இருந்த இவருக்கு, இன்னொரு மகிழ்ச்சியும் வந்து சேர்ந்திருக்கிறது. அதாவது, சமீபத்தில் இவருக்கும், இவரது நீண்ட நாள் காதலி ருகாசோவுக்கும் மகன் (தியாகோ) பிறந்துள்ளார்.

இது குறித்து மெர்ஸி கூறும்போது, அவனின் வருகை "பிபா" சிறந்த வீரர் விருது வென்றதை விட, அதிக மகிழ்ச்சி அளிக்கிறது. ஆரம்பம் முதல் இன்று வரை பயிற்சி மேற்கொள்வதில் புதிய நுணுக்கங்களை எதனையும் நான் கையாளுவது கிடையாது. இதுவரை பார்சிலோனா அணிக்காக பங்கேற்று, எல்லா விருதுகளையும் பெற்றுவிட்டேன்.

தற்போது எனது சொந்த அணியான ஆர்ஜென்டினாவுக்காக பங்கேற்று உலக கோப்பை வெல்வதே எனது முதல் கனவு இவ்வாறு மெர்ஸி கூறினார்.

# உலகச் செய்திகள்

## இந்தோனேசியாவில் நிலநடுக்கம்





இந்தோனேசியாவில் கடந்த வாரம் 6ரிச்டர் அளவுக்கு, நிலநடுக்கம் ஏற்பட்டது. எரிமலைகள் சூழ்ந்த நாடு என்பதால், இந்தோனேசியாவில், ஆண்டு முழுவதும் ஏதாவது ஒரு இடத்தில், நிலநடுக்கம் ஏற்பட்டுக் கொண்டே இருக்கிறது.

நிலநடுக்கம் அதிகமாகும் போது, சுனாமி எச்சரிக்கை விடப்படுவதும், இந்நாட்டில் வாடிக்கையாகிவிட்டது. 2004இல் நடந்த, பூகம்பத்தைத் தொடர்ந்து சுனாமி ஏற்பட்டதால், 2.3இலட்சம் பேர் பலியாகினர்.

இதற்கிடையே, சுமாத்ரா தீவில் உள்ள 'பண்டா அசே' பகுதியிலும், 6 றிச்டர் அளவுக்கு நிலநடுக்கம் ஏற்பட்டது.

இதனால் சுற்றுப்புறத்தில் உள்ள கிராமத்தில், 30க்கும் அதிகமான வீடுகள் இடிந்தன. இதில், சிறுமி ஒருவர் பலியாகியமையும், பலர் காயமடைந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## ஒபாமா பதவியேற்பு விழாவில் 10 இலட்சம் பேர்



அமெரிக்க அதிபர் ஒபாமாவின் பதவியேற்பு விழாவில், 10இலட்சம் பேர் கலந்து கொண்டனர். அமெரிக்க அதிபர் தேர்தல், கடந்த ஆண்டு, நவம்பர் மாதம் நடந்தது. இத்தேர்தலில் ஒபாமா, இரண்டாவது முறையாக வெற்றி பெற்றார். இதைத் தொடர்ந்து அவர், முறைப்படி, வெள்ளை மாளிகையில், அதிபராகப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

இதற்கு மறுநாள், ஒபாமா, வாஷிங்டனில், வெள்ளை மாளிகைக்கு வெளியே, இலட்சக்கணக்கான மக்கள் முன்னிலையில், அதிபராகப் பொறுப்பேற்று உரையாற்றினார். இவரது சொந்த மாகாணமான, பென்சில்வேனியாவிலிருந்து, ஏராளமான மக்கள், திரண்டு வந்திருந்தனர்.

வாஷிங்டன் ரயில்களில், ஆதரவாளர்கள், 5.5இலட்சம் பேர் பயணம் செய்துள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர், ஒபாமாவின் பதவியேற்பு விழாவுக்கு வந்தவர்கள். 10இலட்சம் பேர், ஒபாமாவின் பதவியேற்பு விழாவில், பங்கேற்றதாக, அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். பதவியேற்பு விழாவையொட்டி பல்வேறு கலைஞர்களின் அணிவகுப்பு நடந்தது. இதையும், ஒபாமா, தன் குடும்பத்துடன் அமர்ந்து பார்த்தார்.

அவருடன் முன்னாள் அதிபர்கள் கிளிண்டன், ஜிம்மி கார்ட்டர், உள்ளிட்டோரும், இவ்விழாவில் பங்கேற்றனர். இதில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு, ஒபாமா விருந்தளித்தார். இந்த விருந்தில் இந்தியர்கள் சிலரும் பங்கேற்றனர். வெள்ளை மாளிகையின் ஆலோசகராக உள்ள டோபி சவுத்ரி, சட்டத்துறை அதிகாரி அருண்ராவ், பிரபல இந்திய சமையல் கலைஞர் வினோத் உள்ளிட்டோர், மனைவியுடன் இந்த விருந்தில் கலந்து கொண்டனர்.

## “நானும் சிலரைக் கொன்றேன்” இளவரசர் ஹரி.



'கப்டன் வேல்ஸ்' என்று அழைக்கப்படும் பிரிட்டிஷ் இளவரவர் ஹரி, நான்கு மாத காலமாக ஆப்கானிஸ்தானில் 'அப்பாச்சி போர் ஹெலிகப்டர்' பைலட்டாகப் பயிற்சி பெற்றார்.

பயிற்சி முடிந்து திரும்பிய போது, அவரைப் பத்திரிகையாளர்கள் பேட்டி எடுத்தனர். அப்போது ஹரியிடம், ''நீங்கள் எதிராளிகளைச் சுட்டுக்கொன்றீர்களா?'' என்று கேட்டனர்.

அதற்கு அவர் ஆம், பலரின் வாழ்க்கையைக் காப்பாற்றவே சிலரின் உயிரைப் பறிக்கவேண்டிய நிலை, இராணுவ வீரர்களுக்கு ஏற்படுகிறது என்றார். மீண்டும் அவரிடம், 40மில்லியன் பவுண்டு விலையுள்ள போர் விமானத்தின் காக்பிட்டில் (விமானி அறை) இருந்து கீழே குறிபார்த்து சுட்டீர்களா? என்று கேட்டனர்.

அதற்கு அவர், துணை விமானி என்ற நிலையில், ஒரு சில கலவரக்காரர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தும் படி நேரிட்டது என்றார். இவரது பணியைப் பார்த்து இளவரசர் வில்லியம் பாராட்டியதாகவும், இவர் தொடர்ந்து ஏழு மணி நேரம், ராணுவப்பணி செய்ய நேர்ந்த போது, களைப்பு ஏற்பட்டதாகவும் தெரிவித்தார்.

இதனால், சிப்ரஸ் தீவிலுள்ள இராணுவத்தளத்துக்குப் போய், சில நாட்கள் இருந்துவிட்டுப் பின்பு தாயகம் திரும்பப் போவதாகவும் இளவரசர் ஹரி தெரிவித்தார்.

## ஜப்பான் தீவைத் தாக்க தயார் நிலையில் உள்ள சீனா

ஜப்பான் அரச நிர்வாகத்தின் கட்டுப்பாட்டில், கிழக்கு சீனக் கடலில் 'சென்காடு தீவுகள்' உள்ளன. எனினும் இந்தத் தீவுகளுக்கு, சீனா சொந்தம் கொண்டாடி வருகிறது. இதனால் சீனா - ஜப்பான் இடையே பதற்றம் அதிகரித்துள்ளது. இரு நாடுகளும் 'சென்காடு தீவுகள்' அருகே தங்கள் நாட்டுப் போர்க்கப்பல்களை நிறுத்தி வைத்துள்ளன.

மேலும், ஜப்பான், தமது இராணுவ ஹெலிக்கொப்டர் பிரிவை உஷார்ப்படுத்தியுள்ளது. சரக்குப் போக்குவரத்தில் கவனம் செலுத்துவதைவிட, தாக்குதல் நடவடிக்கைக்குத் தயாராக இருக்கும்படி, சீன இராணுவம் உத்தரவிட்டுள்ளது. இத்தகவலை சீன இராணுவத்தின் அதிகாரபூர்வ நாளிதழான, பி.எல்.ஏ டெய்லி வெளியிட்டுள்ளது. இதற்கிடையே, 'சென்காடு தீவுகள்' பிரச்சினையில் ஜப்பானுக்கு ஆதரவாக அமெரிக்கா கருத்துத் தெரிவித்துள்ளது.

இத்தீவுகளில் ஜப்பானின் நிர்வாகத்தைத் தடுக்கும், எந்த நடவடிக்கையையும், அமெரிக்கா எடுக்காது என்று, சீனாவுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது. மேலும், அப்பகுதிக்கு அமெரிக்கா தனது கண்காணிப்புக் கப்பல்களையும் அனுப்பி வைத்தது. இதற்கு சீனா தனது எதிர்ப்பையும், அதிருப்தியையும் வெளிப்படுத்தியுள்ளது.

## அரசருக்கு ஒரு சந்தேகம்!

அரச மாளிகையிலே, அரசரும் மந்திரியாரும் நெருக்கமாக உரையாடிக் கொண்டிருந்தார்கள். பணியாளர்கள் வந்து ''அரசே போசனம் அருந்த வாருங்கள்'' என அழைத்தார்கள். அரசர் எழுந்து, ''மந்திரியாரே இன்று நீரும் என்னுடன் உணவு உட்கொள்ள விரும்புகிறேன்'' என்றார். மந்திரியாரும் சம்மதித்து, இருவரும் சாப்பாட்டு மேசைக்குச் சென்றார்கள். அன்று அரசியாரே உணவு பரிமாறினார். இருவரும் சுவைத்துச் சுவைத்து உண்டனர். உணவினை ருசித்த அரசருக்கு, திடீரென ஒரு கேள்வி மனதிலே உருவாகியது. ''மந்திரியாரே எனக்கு ஒரு சந்தேகம், அதை தீர்த்து வைப்பாயா?'' எனக் கேட்டார்.

மந்திரியார் புன்னகையுடன், தயங்காமல் கூறுங்கள் அரசரே, விடைகாண முயற்சிக்கின்றேன் என்றார். அரசர் கேட்டார், ''மந்திரியாரே, நாம் தினமும் உணவை ருசித்துக் கொண்டேதான் சாப்பிடுகின்றோம். ஆனால் எமது வாழ்வில் நாம் உட்கொள்ளும் உணவானது, உண்ணும்போது சந்தோசமாக இருக்கிறதா? அல்லது உணவை உண்டு கழிக்கும் போது இன்பமாக இருக்கிறதா? எனக் கேட்டார். மந்திரியாருக்கு சிரிப்பு அடக்கமுடியவில்லை. ''அரசே நாங்கள் உண்ட உணவைக் கழிக்கும்போது தான் எமக்கு இன்பம்'' என மந்திரியார் கூறினார். இதை நான் மறுக்கிறேன் மந்திரியாரே, இருவரும் சுவைத்துச் சுவைத்து இன்பமாகத் தானே அருந்துகின்றோம், ஏன் உனக்கு இப்படி ஒரு சந்தேகம்? கழிக்கும்போது என்ன அப்படி சந்தோசம், கழிக்கும் போது இப்படிச் சுவை தெரிகிறதா? என அரசர் கேட்டார்.

இல்லை அரசே நீங்கள் மறுத்தாலும், எனக்குக் கழிக்கும்போது தான் இன்பமாகத் தெரிகிறது'' என மந்திரியார் கூறினார். சரி அப்படி என்றால் எனக்கு நிரூபித்துக் காட்ட வேண்டும். அவ்வாறு நிரூபித்துக் காட்டாது விட்டால், உனது சொற் குற்றத்திற்காக நீர் தண்டனை அனுபவிக்க வேண்டும்'' என அரசர் கூறினார். மந்திரியார் சிரித்துக்கொண்டே ''சரி நான் நிரூபித்துக் காட்டுகிறேன் மன்னா ஆனால், சில நிபந்தனைக்குள் தாங்களும் கட்டுப்படவேண்டும்'' என மந்திரியார் கேட்டுக் கொண்டார். அதற்கு அரசரும் இணக்கம் தெரிவித்தார். இதற்கு சாட்சியாக அரசியாரும் அங்கு சேவையில் இருக்கின்ற சேவகர்களும்தான் என அனைவரும் ஒப்புக் கொண்டனர். உடனேயே சேவகர்களை மந்திரி அழைத்து, ''அரசருக்கு ஒரு அறையை தயார் செய்யுங்கள். அவர் இன்றுமட்டும் அதற்குள்தான் இருக்கவேண்டும்'' எனக் கூறினார். அரசரும் சம்மதித்து ஒரு நாள் பொழுதினை அறையிலேயே கழித்தார். அறைச் சாவிமட்டும் மந்திரியாரின் கையிலே இருந்தது.

அரசர் எனக்கு என்ன குறை எனச் சிந்தித்துக் கொண்டு பாடல் ஒன்றை முணுமுணுத்தவாறு, சிறிது நேரத்தில் உறங்கிவிட்டார். கண்விழித்துப் பார்த்தார். அடே படுத்தாற் போல உறங்கிவிட்டேன். ஆனால் வயிற்றுக்குள்ளே என்னவோ செய்கிறதே. வயிற்றுக்குள் செய்யும் வேகம் அதிகரித்துள்ளது. என்ன செய்வதென்று தெரியாது, ''மந்திரியாரே கதவைத் திறந்து விடுங்கள். நான் அவசரமாக வெளியே செல்ல வேண்டும்'' என சத்தமாகக் கூறினார். யாரும் பொருட்படுத்தாத மாதிரி இருந்தார்கள்.

அரசருக்கு மேலும் மேலும் வயிற்றுக்குள் போராட்டம் நடந்தது. அரசர் என்ன செய்வதென்று தெரியாது, அறைக்குள் ஓடியோடித் திரிந்தார். அதற்கும் வயிறு கேட்கவில்லை. கதவைப் பல முறை தட்டினார். ''டேய் வாருங்கடா, கதவைத் திறங்கடா என்று கூச்சலிட்டார். இந்த இம்சையை இனியும் பொறுக்க முடியாது என எண்ணிய மந்திரியாரும், அரசியாரும், சேவகர்களும் கதவைத் திறந்து விட்டார்கள்.

அரசர் யாரையும் திரும்பிக் கூட பார்க்காது ஓடினார். சிறிது நேரத்தின் பின் அமைதியாக களைத்து ஓய்ந்தது போன்று வந்து, சாய்வு நாற்காலியில் உட்கார்ந்து, ''அப்பாடா, இப்பத்தான் நிம்மதியாகவும் சந்தோசமாகவும் உள்ளது'' எனக் கூறி மந்திரியாரை ஆவலுடன் பார்த்தார். ''அரசே நீங்கள் கேட்ட கேள்விக்கு விடையும் கண்டுவிட்டீர்களா? '' என மந்திரியார் கேட்டார். மந்திரியாரே, எனக்கு இப்பத்தான் விளங்குகிறது சாப்பிடுகிறதை விட கழிப்பதுதான் இன்பம்'' என்பது. எல்லோரும் கலகலவென சிரித்தார்கள்.


**திருமதி யோகா ரட்ணகுமார்**
**குமுழமுனை மகாவித்தியாலயம்**

# விந்தை உலகம்

## கொடூர விலங்குகளைக் கையாளும் 3 வயதுச் சிறுவன்


அவுஸ்திரேலியாவில் மூன்று வயதுச் சிறுவனான, Charlie Parker மிகச்சிறிய Wildlife ranger ஆவார். இச்சிறுவன் தனது ஒரு வயதிலிருந்தே விலங்குகளுடன் பழக ஆரம்பித்துவிட்டான்.

இதனால் கொடூரமான விலங்குகளை, எப்படிக் கையாள்வது என்ற திறமையும், தானாகவே அவனிடம் வளர்ந்துவிட்டது. முதலையும் இவன் அரண்மனையில் வாய் திறக்காமல் இருப்பது, பார்வையாளர்களுக்கு அதிர்ச்சி கலந்த மகிழ்ச்சியை அளிக்கிறது.



## கடல் நடுவில் ஓர் நகரும் தீவு

Schiermonnikoog நெதர்லாந்தில் அமைந்துள்ள மிகச்சிறிய தீவு, இது தன்னிலையிலிருந்து நகர்ந்து கொண்டே இருக்கிறது. பூமியின் கண்டங்களும் சிறியதொரு நகர்வைக் காட்டுகின்றன. இதனால் இந்தத் தீவின் நகர்வானது, ஒப்பீட்டளவில் வேகமாக இடம்பெறுகிறது. கடந்த 760 ஆண்டுகளில் 2 கிலோ மீட்டர் தூரம் நகர்ந்து விட்டதென்றால் பாருங்கள்... அண்ணளவாக வருடத்திற்கு 2.6 மீட்டர்கள் நகர்கிறது. இது பல ஆச்சரியங்களைத் தோற்றுவித்தாலும், ஆய்வை மேற்கொண்டவர்கள் சில முடிவுகளை முன் வைத்தனர். உண்மையில் இத்தீவு நகரவில்லை, ஒரு பக்கக் கரையோரம் நீரினால் சூழப்படும் நேரம், எதிர்க்கரையில் நீர்மட்டம் பின்னோக்கிச் செல்கிறது. இதனால் நிலப் பரப்பிற்கும் இத் தீவுக்கும் இடையிலான தூரம், வெறும் பார்வைக்கு மட்டும் வேறுபடுவதாகச் சொல்லப்படுகிறது.



## இந்திய மாணவியின் அசத்தலான கண்டுபிடிப்பு

இந்தியாவைச் சேர்ந்த Sankalp Sinha என்ற, 19 வயதான மாணவி ஒருவர், singNshock எனும் அலாரக்கடிகாரம் ஒன்றினை உருவாக்கி அசத்தியுள்ளார். முற்றுமுழுதாக டிஜிட்டல் தொழில்நுட்பத்தில் உருவாக்கப்பட்டுள்ள இக்கடிகாரம், தொடுதிரை மூலமாகக் கையாளக் கூடியவாறு அமைக்கப்பட்டுள்ளது.

விருப்பமான பாடல் மற்றும் அதிர்வு என்பனவற்றினை அடிப்படையாகக் கொண்டு, அலாரத்தினை ஏற்படுத்துவதன் மூலம், தூக்கத்திலிருந்து இலகுவாக விழித்துக்கொள்ள முடியும். மேலும் இக்கடிகாரத்தில் பாடல்களைச் சேமிப்பதற்கென, 32GB SD சேமிப்பு வசதியும் உள்ளடக்கப்பட்டுள்ளது.




## “தினப்புயல்” பத்திரிகைக்கு யாழில் அச்சுறுத்தல்

(நமது நிருபர்)

வவுனியாவிலிருந்து வார இதழாக வெளிவரும் ‘தினப்புயல்’ பத்திரிகைக்கு, இனம் தெரியாத நபர்களினால், பத்திரிகை விற்பனை செய்யக்கூடாது என, கடந்த இரு வார காலமாக, அதன் விற்பனை முகவர்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக, அப்பகுதியில் வாழும், அதாவது யாழ்ப்பாணம், பருத்தித்துறை, நெல்லியடி, பளை, கொடிகாமம், சாவகச்சேரி, சுன்னாகம் போன்ற பகுதிகளில், இவ்வாறான நிலமை காணப்படுவதாக, “தினப்புயல்” காரியாலயத்திற்கு விற்பனை முகவர்கள், வாசகர்கள் தொடர்ந்தும் அறிவித்த வண்ணம் உள்ளனர்.

இதுதொடர்பில், மக்கள் எந்தவித அச்சமும் கொள்ள வேண்டியதில்லை. எமது பத்திரிகையானது, நடு நிலமை கொண்ட பத்திரிகை. இராணுவத்தினராலோ, பொலிஸாரினாலோ, புலனாய்வுத் துறையினராலோ, எந்தவிதப் பிரச்சினையும் இல்லை என, எமது ‘தினப்புயல்’ பத்திரிகைக்கு உத்தரவாதம் வழங்கியுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஆகவே, மக்கள், எமது வாசக நெஞ்சங்கள், விற்பனை முகவர்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை என்பதனை, எமது “தினப்புயல்” பத்திரிகை நிர்வாகம், மக்களாகிய உங்களுக்கு அறியத் தருகிறது. அவ்வாறு ஏதும் பிரச்சினைகள் ஏற்படின் ‘999’ எனும் இலக்கத்திற்கு அறிவிக்கும்படி எமது பத்திரிகை நிறுவனம் கேட்டுக் கொள்கிறது.

## 700 சதுர மீற்றர் கொண்ட விசித்திர முயல்தீவு

ஒக்குநொஷிமா (OKUNOSHIMA) பிரதேசம், ஜப்பானின் Hiroshima மற்றும் Shikoku இடைப்பட்ட சிறிய தீவாகும். இரண்டாம் உலகப் போரின் போது, இராணுவத்தினரின் இரசாயன உற்பத்திகளின் முக்கிய அமைவிடமாகவும் இத்தீவு காணப்பட்டது. இன்று பலராலும் விரும்பப்படும் பாசத்திற்குரிய ஒரு பிரதேசமாக இது மாறியிருக்கிறது. “முயல் தீவு” என அழைக்கப்படும் இத்தீவு முழுவதும், முயல்கள் செறிந்து வாழுகின்றன. 700 சதுர மீற்றர் பரப்பளவைக் கொண்ட இத்தீவில், சுமார் 500 ற்கும் மேற்பட்ட முயல்கள் சுதந்திரமாக நடமாடுகின்றன.











இப்பத்திரிகை இலக்கம் 165A, குருமன்காட்டில் அமைந்துள்ள G.H பதிப்பகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் மாசி 10,2013 அன்று வெளியிடப்பட்டது.